ஸ்ரீரஸ்து.

ஸ்ரீஹஸ்திசைலசிகரோஜ்ஜ்வலபாரிஜாதாய நமஃ

அஸ்மத் குருபரம்பராப்யோ நமஃ

ஸ்ரீமந்நிகமாந்த மஹாகுருவின் ஸப்தம சதாப்தீ

பூர்த்தி ஸ்மாரகமாக ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதிய

நற்பொருளெழு நூறில் முதல் நூறு.

உபந்யாஸகர்களுக்கு அரிய பெரிய விருந்து.

——ஸ்ரீராமாநுஜன் அநுபந்தம்——

இதிலுள்ள விஷயங்களுக்கு அட்டவணை

SRI JAGADACHARYA P. B. ANNANGARACHARYA, KANCHI PURAM-3.

1967

விலை 75 N. P.

ஒரு மஹா புருஷ ஸம்வாதம்

லௌகிகவைதிகங்களில் மஹாநிபுணரும் வித்வானுமான ஒருவடகலைஸ்வாமி 5-12-67ல் அடியேனைக் கடாக்ஷித்தருள வெழுந்தருளினர். குசலப்ரச்னம் பண்ணி விட்டு "நற்பொருளெழுநூறில் முதல்நூறு ஸ்ரீராமாநுஜன் 227ல் எதிர்பார்க்கப் பட்டிருந்ததே, வரவில்லையே, ஏன்?" என்றார். 'இதோ வெளிவரவிருக்கிறது, கடா க்ஷிக்கவேணும்' என்றுசொல்லி ப்ரதமசதகத்தைக் கையில் கொடுத்தேன். இரண் டரைமணிகாலம் அவகாசங்கொண்டு பூர்த்தியாகக் கடாக்ஷித்து, உள்ளமுமுடலும் பூரித்து ப்ரேம பரீவாஹமாகச் சில வார்த்தைகள் ஸாதித்துவிட்டு "ஸமீபத்தில் வெளிவந்த வைதிகமநோஹராவிலும் ஸ்ரீராமாநுஜனிலும் பிராட்டிவிஷயம் ப்ர பத்திவிஷயம் முதலான சிலவிஷயங்களை ப்ரஸங்கித்து எழுதியிருப்பதைப்பற்றி என்ன தத்துவம்? அறிய விரும்புகிறேன்" என்றார். ஒருமணிகாலம் அந்த ஸ்வா மிக்குப் பரமத்ருப்திகரமாக விடை கூறினேன். அதன் சுருக்கம் வருமாறு:-

சிலவாண்டுகட்குமுன் ஒப்பிலியப்பன்ஸன்னிதி. நவநீதம். ஸ்ரீராம தேசிகாசாரியர் "தேசிகப் பிரபந்தவுரை"வெளியிட்டார். ஸ்ரீவசனபூஷணத்தில் பிள்ளான்வார்த்தை யாக "மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்தஸலிலம் போலே" இத்யாதி ஸ்ரீஸூக்தி காணப்படுகிறது. ஸ்வர்ணபாத்ரகதமான கங்கா தீர்த்தத்தில் மத்ய பிந்து கலந்தாற் போலே என்கிற இந்த த்ருஷ்டாந்தத்திற்கும் மேலாக "அந்த தீர்த்த ஸலிலம் மத்ய ப்ரவாஹ பரீதமானுப் போலே" யென்னவேண்டும்படியாக அப்புத்தகத்தில் (D.R. என்கிற மஹான்) பூர்வாசார்ய நிந்தாமயமாக (ஸ்ரீதேசிக வைபவம்) என்று ஒன்றை வெளியிட்டு அதை மறுபதிப்புகளும் செய்து வருகிறார். அதிலுள்ள திவ்ய ஸ்ரீஸூக்திகளைச்சிறிது கேட்டருளவேணும்"; என்று சொல்லி ஸ்ரீராமாநுஜன்222ல் 22. 23 பக்கங்களைப்பூர்த்தியாக வாசித்துக்காட்டினேன். அதில் "இவர்தமக்கு எம்பெருமானார் ஆழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை பிள்ளைலோகாசாரியர் மணவாளமாமுனிகள் முதலான ஆசாரியர்களோடு எவ்வளவு உறவோ அவ் வளவே உறவுதான் ஸ்ரீமந்நிகமாந்த மஹாகுருவோடும்-என்கிற தத்துவத்தை யறியப் பெருமையால் நிகமாந்த குருவுக்கும் தனக்கும் ஏதோ நெருங்கியஉறவு இருப்பதாக நினைத்தும், அவருடைய ஸ்ரீஸூக்திகள் பலவும் தாம் ஆதரிக்கிற மதத்திற்கு வஜ்ரகுடாரமேயென்பதையறியாமலும் அந்த தேசிக சரித்திரத்தில் இவரெழுதியிருந்தவைையத்தனையும் உண்மைக்கு எதிரானவை."....   ....

"திருவாறுயிரப்படிக்குப்பின் தோன்றிய பலவியாக்கியானங்களிலுள்ள தோஷங்களை யெல்லாம் களைந்துதேசிகனருளிய நிகமபரிமல மென்னும் அழகிய வியாக்கியானம் ராமாநுஜாபாத்ரம் அவதரிக்கக் காரணமாயிற்று."— —"நிகமபரிமலத்தில் ஈடு முதலியவற்றிலுள்ள அபார்த்தங்கள் மட்டுமன்றிக்கே திருவாறுயிரப்படியும் பூர்த் தியாகக் கண்டிக்கப்பட்டுத் தொலைந்ததென்று D.R. எழுதியிருக்கலாமே" இத்யாதி ஸ்தலங்களை வாசித்துக் காட்டுகையில் அந்தஸ்வாமி"இவற்றை நான் பன்முறை யும் படித்திருக்கிறேன்; பலர்க்கும் பலகால் "யாவச்சக்யம் ச்ராவயிஷ்யே" என் கிறகணக்கில் கேட்பித்திருக்கிறேன்" என்று ஸாதித்துவிட்டு"ஸந்தோஷம் பரமஸந் தோஷம்; பிராட்டிவிஷயம், ப்ரபத்திவிஷயம் முதலானவற்றில் தேசிகனுடைய திருவுள்ளவுண்மை உலகுக்கு வ்யக்தமாகத் தெரியவேண்டியது அவசியந்தான்; இன்று எனக்கு மஹத்தான ஸுக்ருத மென்று நினைக்கிறேன்; நியமிக்கவேணும், விடைகொள்ளுகிறேன் "என்று சொல்லிக்கொண்டே ரூபா 1116க்கு செக்கு வெட்டிக் கொடுத்து விட்டு car ஏறினர். இதி ஸர்வம்ஸமஞ்ஜஸம், ...

ஸ்ரீ:

ஸ்ரீஹஸ்திசைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதாய நம:

அஸ்மத் குருபரம்பராப்யோ நம:

நற்பொருளெழுநூறு

ஸ்ரீ காஞ்சீ. பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர் எழுதியது.

ஸ்ரீமான் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

நம் ஸ்ரீ வேங்கட நாதார்ய ஸார்வ பௌமர் திருவவதரித்து எழுநூறுண்டு நிரம்பும் ஸமயம் ஸந்நிஹிதமாயிருப்பது பற்றி இந்த ஸமய விசேஷத்தில் அவரவர்கள் தம் தம் பக்திப்ரகர்ஷ மடியாக யதாசக்தி ததீய குணநுபவங்களாலே க்ருதக்ருத்யர்களாக வேண்டியது ஸ்வரூப ப்ராப்தம். எங்கும் ஆசார்ய பக்தர்களை இருவகையாகப் பார்க்கலாம்; ஆசாரியர்களின் பலவகையான பெருமைகளை உட்புகுந்து தெரிந்துகொள்ளாமல் ஸ்தூலமாக மட்டும் தெரிந்துகொண்டு பரதூஷணமே போதுபோக்காயிருப்பார் ஒருவகுப்பினர். ஆசாரியர்கள் திவ்ய க்ரந்தங்களினுல் செய்தருளின மஹோபகாரங்களை ஆழ்ந்தறிந்து அகங்குழைந்து அந்த திவ்ய ஸூக்திகளின் அர்த்தவிசேஷப்ரகாசனங்களினுல் கிஞ்சித்கரிக்கக் குதூஹலமுடையார் மற்றொரு வகுப்பினர். இவற்றுள் முந்தின வகுப்பைச் சேர்ந்தவர்கள் செய்யக்கூடிய கிஞ்சித்காரங்கள் இப்போது விசேஷமாக நடைபெற்று வருகின்றன. (அதாவது) முக்கியமாகப் பலவிடங்களிலும் கூட்டங்கள் கூட்டிப் பேசுவதாம்.

அன்னவர்கள் பேசும் பேச்சுக்கள் எங்கும் ஒரேவிதமாகத் தானிருக்கும்; "நம் தேசிகனைத் தென்னசாரியர்கள் அநியாயமாய் விபவத்திலும் பரிபவப்படுத்தினர்கள்; அர்ச்சையிலும் பரிபவப்படுத்தி வருகிறர்கள். விபவத்தில் (1) திருமாளிகை வாசலில் க்ரந்தாவலோகனம் செய்துகொண்டெழுந்தருளியிருந்த ஸ்வாமியைக் காலை வாரியிழுத்துத் தெருவிலே தள்ளி ஹிம்ஸித்தது; (2) திருமுடியிலே படும்படி பாதரக்ஷைகளைத் தோரணமாகக் கட்டித் தொங்கவிட்டது; (3) ச்ராத்தத்தில் நிமந்த்ரணத்திற்கு ஒப்புக்கொண்டிருந்தவர்களை ஸமயத்தில் வஞ்சிக்கச் செய்தது; (4) ஏகாதசியன்று பொங்கலைக் கையில் கொணர்ந்து கொடுத்துத் திணிக்கும்படி நிர்ப்பந்தித்தது; (5) ஸ்வாமியின் பாண்டித்யப் பெருமைகளில் பொறாமைகொண்டு வாதத்திற்கு அழைத்தது. இப்படியிப்படியாகச் செய்த ஹிம்ஸைகள் வாசாமகோசரம். இத்தகைய ஹிம்ஸைகள் விபவத்தோடு போய்விடாமல் அர்ச்சையிலும் செய்துவருமவை சொல்லவேண்டியதில்லை; ப்ரத்யக்ஷமாகப் பார்த்து வருகிறீர்கள். இவை தவிர இன்னமும் செய்கிற ஹிம்ஸைகளுக்கு அளவேயில்லை; திருவாய்மொழியிரப்படிக்குப் பின் தோன்றிய வியாக்கியானங்களிலுள்ள அபார்த்தங்களைக் களைந்து ஸ்வாமி ஆச்சரியமாக அருளிச்செய்திருந்த நிகமபரிமலத்தை அபஹரித்துவிட்டார்கள்; சரணகதியின் பெருமையையும் பிராட்டியின் விபுத்வ காரணத்வ மோக்ஷப்ரதத்வாதி வைபவங்களையும் ஸ்வாமி தேசிகன் ஆச்சரியமாக நிலைநாட்டியிருக்க அவற்றையும் தூஷித்து வருகிறர்கள்....என்றிப்படி ஒருவர்மாறி ஒருவராகப் பேசு

வதும் கண்ணீர்மழைசோர நிற்பதுந்தான் கூட்டங்கள்தோறும் காணக்கூடிய நிகழ்ச்சி. வேறு செய்யகில்லாதார் இவற்றையே நிச்சலும் செய்து ஸ்வரூபம் நிறம் பெறுக. "இரண்டு தனியன்களைப் பெறும் பாக்கியம் நம் தேசிகனுக்கே அஸாதா. ரணமாக வாய்த்தது; தேசிக சப்தம் ஈரரசுபடாமல் தமக்கே உரித்தாயிருக்கும் பாக்கியமும் நம் தேசிகனுக்கேயாகும்; வேங்கடத்துச்சியில் கண்ட மாமணியைத் தண்காவிலன்றோ கண்டார் கலியன். "ஹந்த ஹந்த ராமக்ருஷ்ண தூஷணுபிதாயி நாம் கிம் நு சித்ரமத்ர சைத்ய ராவணுநுஸாரிணும்" என்று அக்காலத்திலேயே மனம் நொந்து பேசியிருக்கவில்லையா ?" என்றிப்படிப்பட்ட வார்த்தைகளைச் சந்தை சொல்லித் திருவைசொல்லி ஆங்காங்கு பாடம் ஒப்பித்துவருகிறார்கள்; வருக வருக.

மேலே குறித்த இருவகுப்பில் இரண்டாம் வகுப்பைச் சேர்ந்த அடியேன் யதாசக்தி செய்ய நினைத்த கிஞ்சித்காரம்—நிகமாந்த மஹாகுருவின் நிதிபோன்ற நூல்களிலிருந்து எழுநூறு அர்த்தங்களைத் தென்மொழியிலும் வடமொழியிலும் தெளிவாகவெழுதி உபஹரிக்கவெழுகின்றேன். வடமொழியில் எழுதுவது ஸதர்த்த ஸப்தசதீ என்பதாம். தென்மொழியிலெழுதுவது இதோ வெளிவந்து கொண்டேயிருக்கின்றது. நூறுநூறாக ஏழு மாதங்களுக்குள் வெளிவந்து முடிவு பெறும். இங்ஙனே ஸங்கல்பம் செய்துகொண்டது போலவே இவ்வெழுநூறு நற் பொருள்களில் ஸம்ப்ரதாய பேத சர்ச்சையில் சேர்ந்த அர்த்தம் ஒன்றுகூடப் புகாதபடிக்கும், * கேட்டறியாதன கேட்கின்றேன் * கண்டறியாதன காண்கின் றேன் * என்று அநஸூயுக்கள் அகமகிழ்ந்து உளங்குளிர்ந்து உரைக்கும்படிக்கும் அமைக்கவேண்டுமென்றும் திடமான ஸங்கல்பம் செய்துகொண்டேன். ....

இதுகாறும் அடியேனெழுதி வெளியிட்ட உபந்யாஸசதத்வயம், நல்வார்த்தை நானூறு முதலியவற்றிற்காட்டிலும் இந்த நற்பொருளெழுநூறு மிகவிலக்ஷண மென்பதை ஸஹ்ருதய ரஸிகர்கள் உணர்வர்கள்.

வெண்பா

வேதக் கடல்கடைந்த வேதாந்த வாரியர்தம்
போதக் கடலாகப் போந்தவிது—கோதற்ற
ஞானியர்க்கு நற்செல்வாம் நன்னிதியாம் நல்வீடாம்
தேனி லினிதாம் தெளிந்து.

— எழுநூறில் முதல்நூறு —

1. ஹயக்ரீவஸ்தோத்ரே (3) * வக்த்ரீ வேதாந் பாது மே வாஜிவக்த்ரா * இங்கு (வேதாந் வக்த்ரீ) என்பதில் சிலர்க்கு ஸந்தேஹமுண்டாகும்; யதிராஜ ஸப்த தியுபக்ரமத்தில் * ப்ரவக்தா ச்சந்தஸாம், வக்தா பஞ்சராத்ரஸ்ய * என்றதுபோல இங்கும் (வேதாநாம் வக்த்ரீ) என்று ஷஷ்டியிருக்கவேண்டாமாவென்று கலங்குவர். இரண்டுக்கும் வியாகரணத்தில் வழியுண்டு. வியாகரணத்தில் சென்று துவள வேண்டா; ஸ்ரீ ராமாநுஜர் சரணுகதி கத்யத்தில் * த்வயம் அர்த்தாநு ஸந்தா நேந ஸஹ ஸதா ஏவம் வக்தா * என்றருளிச் செய்ததில் (த்வயம் வக்தா) என் றிருப்பதைச் சிந்தை செய்வது.

2. (அந்தச்லோகத்திலேயே) [வாஜிவக்த்ரா.] பஹுவ்ரீஹியில் ஸமாநாதி கரண ஸமாஸமென்றும் வ்யதிகரண ஸமாஸமென்றும் இரண்டுண்டு. பீதம் அம் பரம் யஸ்ய ஸ:- பீதாம்பர:; க்ருஷ்ண: கேச: யஸ்ய ஸ:-க்ருஷ்ணகேச:. என்னு மிவை ஸமாநாதிகரணஸமாஸம். சக்ரம் பாணௌ யஸ்ய ஸ:- சக்ரபாணி: இத்யாதௌ வ்யதிகரண ஸமாஸம். அதேபோல் இங்கு, (வாஜீ வக்த்ரே யஸ்யாஸ

ஸா) என்றே (வாஜிந இவ வக்த்ரம் யஸ்யாஸ் ஸா) என்றே சொல்லவேண்டுதலால் வ்யதிகரண ஸமாஸமென்க.

3. (ஹயக். 5.) * [அபௌருஷேயைரபி வாக்ப்ரபஞ்சைः அத்யாபி தே பூதிம் அத்ருஷ்ட பாராம்] வேதத்தில் ஹயக்ரீவரைப் பற்றி எங்கே ஓதப்பட்டிருக்கின்றதென்று கேட்க வேண்டா. கீழ் மூன்றும் சுலோகத்தில் * வாகீசாக்க்யா வாஸுதேவஸ்ய மூர்த்தி : * என்று ஹயக்ரீவரை வேத வேத்யனை எம்பெருமானுடைய மூர்த்தி விசேஷமாகவே சொல்லியிருக்கையாலே எம்பெருமானைப் பற்றினதெல்லாம் ஹயக்ரீவரையும் பற்றினதேயென்று கொள்ளக் குறையில்லை.

4. இதற்கொரு நிதர்சனம் காணலாம்; கோதாஸ்துதி இரண்டாம் சுலோகத்தில் ஆண்டாளை விளித்து * வைதேசிக: ச்ருதிகிராமபி பூயஸீநாம் தே மஹிமா* என்கிறார். 'வேதங்களாலும் அறுதியிடவொண்ணாதது ஆண்டாளுடைய மஹிமை' என்று கூறினது ஆண்டாளை ஸ்ரீ மஹாலக்ஷ்மியாகவே கொண்டன்றே. அதுபோலவே.

5. ஆழ்வார்கள் * வசையில் நான்மறை கெடுத்த அம்மலரயற்கருளி முன் பரிமுகமாய், இசைகொள் வேதநூலென்றிவை பயந்தவனே! * என்றும், * பன்னு கலை நால்வேதப் பொருளையெல்லாம் பரிமுகமா யருளியவெம் பரமன் * என்று மருளிச்செய்திருப்பதுகொண்டு (ச்லோ. 7ல்) * தைத்யாபநீதாந் தயயைவ பூயோபி அத்யாபயிஷ்யோ நிகமாந் ந சேத் த்வம்—மந்தோபவிஷ்யந் நியதம் விரிஞ்சः * என்றருளிச் செய்தார்.

6. (ஹயக். ச்லோ. 13.) * மநோகதம் பச்யதி யஸ் ஸதா த்வாம்....கிங்குர் வதே தஸ்ய கிரோ யதார்ஹம் * என்றவிடத்தில் வாக்குக்கள் வச்யமாகின்றன வென்று சொல்லாதே அவனுக்குக் கைங்கர்யம் செய்கின்றனவென்று சொன்னது - சக்ரவர்த்தி திருமகனுக்கு அஸ்த்ரக்ராமங்கள் "இமே ஸ்ம கிங்கரா:" என்றுநின்றதை நினைப்பூட்டுவதற்காக வென்னலாம்.

7. பகவத் திவ்ய ஸௌந்தர்ய லாவண்ய தர்சனத்திலோ பாகவதவாகம்ருத ச்ரவணத்திலோ மஹத்தான ஆனந்தமுண்டானாலுங்கூடச் சிலர் விகாரமடையாமலேயிருந்திடுவர்கள்; உண்மையான ஆனந்தமுண்டானால் பரவசமாகக் கண்ணீர் பெருகியே தீருமென்பதை (ஹயக். 16.) * அமாந்தமாநந்த பயோதி மந்த : பயோ பிரக்ஷூணும் பரிவாஹயந்தி * என்பதனால் காட்டியருளுகிறார்.

8. (ஹயக். 18.) * ஸமேதிஷீரந் தவ பாதபத்மே ஸங்கல்ப சிந்தாமணய: ப்ரணாமா : * இங்கு (ப்ரணாமா :) என்று பஹுவசந ப்ரயோகம் பண்ணுவதும், யதிராஜ ஸப்ததியில் * ப்ரணாமம் லக்ஷ்மணமுநி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம் * என்று ஏகவசநப்ரயோகம் பண்ணுவதும் வாசியற்றதேயாகும். ஏகவசனத்தைக் கொண்டு ஸக்ருத்த்வத்தையும் பஹுவசனத்தைக்கொண்டு ஆவ்ருத்தியையும் அறுதியிடமுடியாது. ஸக்ருத்ப்ரணாமம் செய்பவர்களுக்கும் காலபேதத்தாலே பஹு ப்ரணாமங்கள் தேறும். ஏகவசனமுள்ளவிடம் ப்ரணாம ரூப க்ரியையைக் காட்டுமதொழிய ஸங்க்யாநியதிநியாமகமாகாது.

9. (ஹயக். 27.) * ஜிகீஷதோ மே கவிதார்க்கிகேந்த்ராந் ஜிஹ்வாக்ரஸிம்ஹாஸநம் அப்யுபேயா : * என்று கவிதார்க்கிக விஜயத்தைப் பலனாகக் கோருவது ஸித்தாந்தஸ்தாபநேச்சையினாலாதலால் நிரவத்யம். * செற்றார்திறலழியச் சென்று செருச் செய்யும் குற்றமொன்றில்லாத * (திருப்பாவை 11) என்றவிடத்து எமது விசேஷவுரை காண்க. [இனி பரமார்த்த ஸ்துதியைப்பற்றி.]

10. திருப்புட்குழி யெம்பெருமான் விஷயமான பரமார்த்தஸ்துதியின் முதல் சுலோகம் மிகவற்புதமானது. எம்பெருமானைக் கல்பவ்ருக்ஷமாகச் சொல்லு

வது எங்குமுள்ளது. திருப்புட்குழியென்னும் திவ்யதேசத் திருநாமத்திற்கேற்ப அங்கொரு பொய்கையுள்ளது. அங்குறையும் போரேற்றுப் பெருமாளைப் பொய்கைக்கரையில் முளைத்ததொரு கற்பகத்தருவாகப் பேசி * யத்ர துங்கை : அதுங்கைச் ச ப்ரணதைர் க்ருஹ்யதே பலம் * என்று ச்லேஷாபிராமமாக வருளிச்செய்கிறார். உலகத்தில் சில மரங்களில் பழம்பறிக்க உயரமானவர்களே வல்லவர் ; சில மரங்களுக்கு வாமனர்கள் வல்லவர். இந்த விலக்ஷண கல்பவ்ருக்ஷத்தின்படியோவென்னில், உன்னதர்களும் வாமனர்களும் மிகவும் தாழ்ந்தே பலன்பெறவேண்டும்படியாயிருக்குமென்கிறார். ஜன்மவ்ருத்தங்களினால் மிகவுயர்ந்தவர்களாயினும் அவற்றால் மிகத் தண்ணியவர்களேயாயினும் ப்ரணாம மாத்ரத்தினால் இப்பெருமான் பக்கலில் பேறுபெறக் குறையில்லையென்றதாயிற்று. இது சாடூக்தி.

10. (பரமா. 5.) * அவநம் ச்ரயதாம் அஹீநமாத்யம் ஸ ச தர்மஸ் த்வதநந்ய ஸேவநீய : * என்றவிடத்தில் மேலெழுந்தவாரியாகப் போய்விடலாகாது. நமது யஜுர் வேதத்தில் ஆறுவது காண்டத்தில் “ திஸ்ர: அஹீநஸ்ய யஜ்ஞஸ்ய” என்றும் “ த்வாதச அஹீநஸ்ய யஜ்ஞஸ்ய ” என்றும் அஹீநஸத்ரமென்று ஒரு யாகவிசேஷம் ஓதப்பட்டுள்ளது, பூர்வமீமாம்ஸையில் மூன்றாமத்யாயத்தில் மூன்றாம்பாதத்தில் இந்த அஹீநஸத்ரவிஷயமான விசாரமுமுள்ளது. இதை நம்முடைய வியாக்கியானத்தின் உதவிகொண்டு நன்குணர்ந்து சுலோகத்தின் கருத்தைச் சுவைத்தநுபவிப்பது.

11, (பரமா. 9.) * புஜகேந்த்ர கருத்மதாதிலப்யை : * இந்த சுலோகத்தின் உத்தரார்த்தம்....“ ஸ்வபதே ரணபுங்கவ ஸ்வயம்மே பரிசர்யாவிபவை : பரிஷ்க்ரியேதா: * என்பதாக புராதனமும் நிரவத்யமுமான பாடம். எப்போதோ பாடவிகாரம் விளைந்திட்டது. மூன்றாம்பாதத்தின் முடிவில் மே என்பது மாமென்று மாறிவிட்டது. முடிவில் பரிஷ்க்ரியேதா : என்று [கர்மணி ரூபமாக] ப்ரயோகித்தருளின ஸ்வாமியின் திருவுள்ளத்தையுணரகில்லாதார் அதை கர்த்தரியாகத் திருத்தப்பார்க்கிறார்கள். இன்னமும் பலவகையான விப்லவங்களும் உபப்லவங்களுமுண்டு. அவற்றில் முசியாதே நமது வியாக்கியானங்கண்டு தெளிவது. [இனி வைராக்ய பஞ்சகத்தைப்பற்றி.]

12. ஸ்வாமியினுடைய வைராக்யம் அவருடைய சரித்திரங்கள் பலவற்றாலும் விளங்குவதுபோல (அல்லது விளங்குவதிற் காட்டிலும்) வைராக்ய பஞ்சகமென்கிற ஐந்து சுலோகங்களினால் அற்புதமாக விளங்காநின்றது. காளிதாஸ கவி * லபேத வா ப்ரார்த்தயிதா ந வா ச்ரியம் ச்ரியா துராப: கதமீப்ஸிதோ பவேத் * என்றார் சாகுந்தல நாடகத்தில். எனக்கு லக்ஷ்மி வேணுமென்று விரும்புமவனுக்கு லக்ஷ்மி கிடைக்காமற்போனாலும் போகும் ; லக்ஷ்மி தானே ஒருவனை விரும்பினால் அவனுக்கு லக்ஷ்மி எப்படி கிடைக்காமற் போகும் ? என்பது இதன் கருத்து. [ச்ரியா ஈப்ஸித : கதம் துராபோ பவேத் ? என்று அந்வயம்.] இது நம்ஸ்வாமி பக்கலில் வ்யபிசரித்துவிட்டது. உஞ்சவ்ருத்தியினாலே தேஹயாத்ரையை நடத்திக்கொண்டு போந்த ஸ்வாமி ராஜஸ்தானத்தில் தமக்குக் கிடைக்கவிருந்த பெருஞ்செல்வத்தையும் உதறித்தள்ளினது உவமையற்ற வைராக்யமன்றோ.

13. * ந மே பித்ரார்ஜிதம் கிஞ்சித் ந மயா கிஞ்சிதார்ஜிதம், அஸ்தி மே ஹஸ்திசைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் * என்ற ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்தி இன்சுவைமிக்கது. உலகில் அவரவர்கள் தாம் ஈட்டும் பொருள் ப்ரயாஸலப்யமாகையாலே த்ருப்தியைத் தாராது. பிதாவின் ஸ்வயமார்ஜிததனம் இருக்குமானால் அதைப் பிதா ஸ்வச்சந்தமாக விநியோகிக்கப் பூர்ணாதிகாரம் பெற்றவராதலால் அதை நியமேந எதிர்பார்க்கப் புத்திரனுக்கு ப்ராப்தியில்லை. இவ்விரண்டுமன்றிக்கே பிதாமஹார்ஜிதமிருக்குமாகில் அதற்குச் சலனமில்லை. இதைத் திருவுள்ளத்திற் கொண்டு “ அஸ்தி மே பைதாமஹம் தநம் ” என்றருளினது மிக்க சமத்காரம். நான்முகனுக்குப் பிதாமஹனென்று பெயராதலால் அவன் படைத்த பெருஞ்

செல்வம் தேவப்பெருமாள்; அவரிருக்க எனக்கொரு குறையில்லையென்றுராயிற்று.

14. (வரதராஜபஞ்சாசத். 1.) [த்விரதசிகரிஸீம்நா ஸத்மவாந்] ஸீம்நா என்றது த்ருதீயாவிபக்தி. ஹஸ்திசைல சிகரேண என்றபடி. த்ருதீயையாக இருந்தாலும் (சிகரத்தாலே) என்று பொருள்சொல்லக்கூடாது. சாஸ்த்ரஜ்ஞர்கள் இங்கு "அபேதார்த்தே த்ருதீயா" என்பர்கள். "தாந்யேந தநவான்" என்று இதற்கு உதாஹரணம் காட்டுவர்கள். தான்யத்தினாலே (ஸம்பாதிக்கப்படப்போகிற) தனத்தையுடையவன் என்பது இதற்குப் பொருளன்று. தான்யமாகிற தனத்தையுடையவன் என்றே பொருள். அதுபோல 'திருவத்திமா மலையுச்சியாகிற இருப்பிடத்தையுடையவன்' என்று பொருள்.

15. (அந்தச்லோகத்திலேயே.) [கலசஜலதிகந்யா] கலசமென்று க்ஷீரத்திற்குப் பெயர்; அதன் பக்கத்திலே ஜலத்தைச் சொல்லியிருப்பது எதற்காக? இங்கே பாற்கடல் விவக்ஷிதமேயொழிய நீர்க்கடல் விவக்ஷிதமன்றே; க்ஷீரத்தையும் ஜலத்தையும் சேரச்சொல்லுவது எதற்காக? என்று சிலர் கேட்பதுண்டு. இந்த சங்கையை அவர்கள் 'க்ஷீராப்தி, க்ஷீராம்போநிதி, க்ஷீரபயோநிதி' என்று ஸுப்ரஸித்தமான பதங்களிலேயே பண்ணலாம். அவர்கள் தெளியவேண்டியதாவது - க்ஷீரகலசாதிபதங்களோடு சேர்ந்துவருகிற அப்பு, அம்பஸ்ஸு, ஜலம்....இத்யாதி பதங்களுக்குத் தனிப்பட அர்த்தம் கிடையாது. கடல் என்று மட்டும் பொருள். க்ஷீரகலசாதிபதங்கள் சேர்ந்து பாற்கடல் என்னும் பொருளைத்தருகிறது.

16. (வரதரா. 2.) [யஸ்யாநுபாவதிகந்துமசக்நுவந்தோ முஹ்யந்தி அபங்குரதியோ முநிஸார்வபௌமா:] இதற்குப் பலர் என்ன கருத்துச் சொல்லுகிறார்களென்றால், தேவப்பெருமாளுக்கு ஆழ்வார்களின் மங்களாசாஸனம் கிடையாதென்று தாங்களாக ஒருமுடிவு செய்துகொண்டு இதை தேசிகனும் ஸ்பஷ்டமாக ஸாதிக்கிறார் என்று பீடிகையிட்டு 'ஆழ்வார்கள் தேவப்பெருமாளுடைய பெருமையில் மோஹித்துப்போனபடியாலே வாய்திறந்து பாசுரம்பாட மாட்டிற்றிலர்' என்பதாகப் பொருளுரைத்து வருகிறார்கள். (முநிஸார்வபௌமா:) என்றதற்கு ஆழ்வார்களே பொருளென்பதை மறுப்பாரில்லை; அவர்கள் மோஹித்தார்களென்பதும் இல்லை செய்யத்தக்கதன்று. ஆழ்வார் திருவாக்குக்களில் தேவப்பெருமாள் பாடல் ஸ்பஷ்டமாக விளங்காநிற்க இந்த சுலோகங்கொண்டு அதனை இல்லை செய்யப்போகாதன்றோ. பூதத்தாழ்வார் திருவந்தாதியில் * என்னெஞ்சமேயான் * அத்தியூரான் புள்ளையூர்வான் * என்கிற பாசுரங்களும், பெரிய திருமொழியில் * வரந்தரும் மாமணிவண்ணனிடம் * என்கிற பாசுரமும் தவிர கச்சியென்று வருமிடங்களிலெல்லாம் தேவப்பெருமாளை விவக்ஷித்தே தீரவேண்டிய நிர்ப்பந்தமுண்டு; ஏனெனில், காஞ்சீ என்கிற வடசொல்லே கச்சியெனத் திரிந்தது; "க இதி ப்ரஹ்மணோ நாம தேந தத்ராஞ்சிதோ ஹரி:, தஸ்மாத் காஞ்சீதி விக்யாதா புரீ புண்யவிவர்த்திநீ * என்கிற புராணச்லோகத்தின்படி பிரமனால் ஆராதிக்கப்பட்ட தலத்தையேயன்றோ காஞ்சியும் கச்சியுங்காட்டும்.

17. தேவப்பெருமாளுக்கு ஆழ்வார் மங்களாசாஸனமுள்ளதென்பதை தேசிகன் கண்டோக்தியாலும் வெளியிட்டவர்; எங்ஙனேயென்னில்; த்ரமிடோபநிஷத்ஸாரத்தில் * பரத்வாத்யைரித்தம் * என்று தொடங்கும் ஐந்தாவது சுலோகத்தில் * ப்ரதமசதகே வீக்ஷ்ய வரதம் * என்று திருவாய்மொழி முதற்பத்துமுழுதும் தேவப்பெருமாள் விஷயமென்று ஸாதித்தருளினார். இது ஸுஸ்பஷ்டமான உக்தியாதலால் கண்ணழிக்கமுடியாதது.

18. திருவாய்மொழி முதற்பாசுரத்தில் * அயர்வறுமமரர்களதிபதி * என்றிருக்கையாலே அதுமட்டும் தேவப்பெருமாள் விஷயமென்று ஒருவாறு சொல்லப் பொருந்தும்; முதற்பத்துமுழுதும் தேவப்பெருமாள் விஷயமென்று கொள்வதற்கு ஔசித்யமுண்டோவென்று சிலர் கேட்கக்கூடும். முதற்பத்தின் முடிவுபாசுரத்தில்

* மணியை வானவர் கண்ணனை * என்றிருக்கையாலே [வானவர் கண்ணன்—தேவாதி ராஜன்] என்று கொண்டு உபக்ரமோபஸம்ஹாரந்யாயத்தாலே * ப்ரதமசதகே வீக்ஷ்ய வரதம் * என்றருளிச்செய்தது பொருந்தும்.

19. [வரதராஜபஞ். 7.] * யம் சக்ஷுஷாமவிஷயமித்யாதி.] என்றைக்கோ பிரமனொருவன் செய்த புண்ணியத்தினால் நீண்டகாலம் உலகமெல்லாம் தேவப்பெருமாளை ஸேவித்துக்களிக்கின்றதென்று ஸாதித்தவிதனால் பண்டிதராஜனுடைய ஒரு சுலோகம் நினைப்பூட்டப்படுகிறது. (அதாவது) * சாதகஸ் த்ரிசதுராந் பயஃ கணாந் யாசதே ஜலதரம் பிபாஸயா, ஸோபி பூரயதி விச்வமம்பஸா ஹந்தஹந்த மஹதாம் உதாரதா * இதன் பொருளாவது, வர்ஷபிந்துவாலல்லது மற்றொன்றால் அபேக்ஷையற்றதான சாதகபக்ஷி தனக்கு ஸ்வல்பஜல பிந்துக்கள் வேணுமென்று விரும்ப, மேகம் அதன் கோரிக்கையை நிறைவேற்றுவதோடு நில்லாமல் உலகத்தையெல்லாம் வெள்ளம் பரந்ததாகச் செய்கின்றதென்பதாம். சாதகபக்ஷி போன்ற பிரமனொருவனுடைய கோரிக்கையை நிறைவேற்றத் திருவுள்ளம்பற்றிய தேவப்பெருமாள் அவனுக்குமட்டும் காட்சிதந்து மறைந்திடாமல் நீடூழிகாலம் உலகமெல்லாம் வாழத் திருவத்திமாமலையிலே திகழ்கின்றாரென்றபடி.

20. (அதிலேயே. 8.) [தத்தத்பதைருபஹிதேவி துரங்கமேதே] தேவப்பெருமாளை ஸாக்ஷாத்கரிக்கப் பிரமன் அச்வமேதயாகம் செய்கையில் அக்னியில் ஆஹுதி செய்யப்பட்ட ஹவிஸ்ஸு முழுவதையும் எம்பெருமானைச் சிந்தை செய்துகொண்டு அப்பெருமானுக்கே நேரில் ஸமர்ப்பித்ததனால் பல பல தேவதைகள் யாகசாலைக்கு நேரில் வந்திருந்தும், ‘‘ஸோமாய ஸ்வாஹா, வருணாய ஸ்வாஹா; இந்த்ராய ஸ்வாஹா, ஸூர்யாய ஸ்வாஹா’’ என்றிப்படி அந்தந்த தேவதைகளை உத்தேச்யர்களாகக் கொண்டு ஹோமம் செய்யப்பட்டபோதிலும், ஒரு ஹவிஸ்ஸும் ஒரு தேவதைக்கும் கிடைக்காமற் போக அதனால் மிக்க வருத்தங்கொண்ட அத்தேவதைகள் நான்முகனை நோக்கித் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்து ‘இப்படியும் எம்மை அவமானப்படுத்துவது தகுதியோ பிரம!’ என்று முறையிட, அவர்களை நோக்கி அயன் ‘தேவர்காள்! ஆயுள், ஆரோக்யம், மக்கள், செல்வம் முதலிய அற்ப பலன்களைக் குறித்து வேள்வி புரிகின்றவர்களே உங்களைக் குறித்து யஜிப்பவர்கள்; அன்னவர்களால் ஆஹுதி செய்யப்படும் ஹவிஸ்ஸுகளே உங்களுக்குக் கிடைக்கக்கூடியவை; முமுக்ஷுக்களான பரமைகாந்திகளால் ஸ்ரீமந்நாராயணனே ஸாக்ஷாத்தாக யஜிக்கப்படுகிறபடியால், அன்னவர்களால் அர்ப்பணம் செய்யப்படும் ஹவிஸ்ஸுக்களை ஸாக்ஷாத் பரமபுருஷன் தானே ஸ்வீகரித்தருள்வான்; இப்போது அடியேன் முமுக்ஷுவாய்ப் புண்டரீகாக்ஷனையே ஸாக்ஷாத்கரிக்கவெண்ணி யாகஞ் செய்கிறேனென்பதை நீங்களனைவருமறிவீர்; இந்த வேள்வியில் ஹோமம் செய்யப்படும் அவியுணவுகளை அமரர் பெருமான்தானே ஸாக்ஷாத்தாக அங்கீகரித்தருள்கின்றமையால் நீங்கள் இவ்வுணவுகளைப் பெற ஆசை கொள்ள அவகாசமில்லை’ என்றுகூற, அமரர்கள் ஸமாஹிதரானார்களென்று ஹஸ்திகிரி மாஹாத்மியத்திலுள்ள கதையை இந்த சுலோகத்தில் சமத்காரமாக அருளிச்செய்தபடி. *ஏததேவ அம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி* என்ற ச்ருதியையும் திருவுள்ளம் பற்றினபடி.

21. (அதிலேயே. 13) * ஆசாதிபேஷு கிரிசேஷு சதுர்முகேஷ்வபி. * ‘‘ச்ருதிஸ் ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா’’ என்று பகவான்தானே சோதிவாய்திறந்து பணித்தபடியே அவன் தன்னுடைய கட்டளையாயிரா நின்ற ச்ருதிஸ்மிருதிகளில் இன்னின்னவற்றைச் செய்யவேண்டியதென்கிற விதிகளும், இன்னின்னவற்றைச் செய்யலாகாதென்கிற தடைகளும் நிரம்பியுள்ளன. இங்ஙனமாகவுள்ள விதி நிஷேதங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய நியதி நமக்கு மட்டுமல்ல; பிரமன் சிவனிந்திரன் முத

லான தேவர்களுக்குமுண்டு; அவர்களும் ஆஜ்ஞையை யநுஸரித்து நடப்பதனுல் நன்மைகளையும், மீறி நடப்பதனுல் தீமைகளையும் அடைகிறார்கள் என்கிறது இந்த சுலோகத்தில். இதனுல் அத்தேவர்களுக்கு அவரத்வமேயொழியப் பரத்வமில்லையென்பது விளங்கும். திருவாசிரியம் மூன்றுவது பாட்டில் * ஆணை மெய்பெற நடாய தெய்வம் மூவரில் முதல்வனுகி * என்றருளிச்செய்தது இங்கே அநுஸந்தேயம்.

22. (அதிலேயே. 16.) [ஸஞ்சிந்தயந்தி....சாந்தோதிதம் சமவதா ஹ்ருத்யேந தந்யः] பரவ்யூஹவிபவாதி பஞ்சப்ரகாரமான எம்பெருமானது நிலைமைகளில் வ்யூஹநிலையில் நித்யோதிதமென்றும் சாந்தோதிதமென்றும் இரண்டு தசைகள் பகவச் சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் சாந்தோதித தசையை ஆழ்வானும் பட்டரும் தங்கள் ஸ்தவங்களில் எடுத்தாளுகிறார்கள். வரதராஜஸ்தவத்தில் * ப்ரசாந்தாநந்தாத்மாநுபவஜ மஹாநந்தமஹிம ப்ரஸக்த ஸ்தைமித்யாநுக்ருத விதரங்கார்ணவதசம்* என்பது ஆழ்வான் ஸ்ரீஸூக்தி. "....அநந்த ஸ்வவசகந சாந்தோதித தசः, த்வமேவ த்வாம் வேத்த ஸ்திமிதவிதரங்கம்" என்பது பட்டர் ஸ்ரீஸூக்தி. இவ்விரண்டு ஸ்ரீஸூக்திகளையும் நெஞ்சிற்கொண்டு இங்கு சாந்தோதிதம் என்றுமட்டும் அருளிச்செய்தார். அடியேனுடைய வியாக்கியானங்களில் விவரணம் காண்க.

23. (அதிலேயே 18.) [மோஹாந்தகார...த்வத் தேஜஸி த்விரதசைலபதே! விம்ருஷ்டே ச்லாக்யேத ஸந்தமஸபர்வ ஸஹஸ்ரபாநோः.*] இந்த உத்தரார்த்தத்தின் பொருள் துரவகாஹம். கருத்தை எளிதாக விவரிக்கிறோம். ஸஹஸ்ரபாநுவென்று ஸூரியனுக்குப் பெயர். ஸந்தமஸபர்வ—அமாவாஸ்யை; ஸூர்யனிற்காட்டில் அமாவாஸ்யை கொண்டாடப்படும் என்பது சப்தார்த்தம். இதன் கருத்து ஏதென்னில்; கேளீர். ஒரு வித்வத்ஸதஸ்ஸில் ப்ரசண்டபண்டிதரொருவர் பேசுகிறார். அவர் பக்கத்தில் அல்பச்ருத்ரான பண்டிதம்மந்யரொருவர் இருக்கிறார். 'நமக்கு ஒன்றும் தெரியாது; நாம் யதாஜாதர்கள்' என்று தங்களுடைய ஜ்ஞானலவலேச சூந்யதையை உணர்ந்தவர்களும் அங்குள்ளார்கள். ஆக, ஸர்வஜ்ஞரென்னும்படியான யதார்த்தபண்டிதரொருவர், அல்பஜ்ஞனை பண்டிதம்மந்யனெருவன். ஒன்றுமறியாத யதாஜாதனெருவன்—என்று இம்மூவரை மனத்தில் கொள்ளுங்கள். ஸர்வஜ்ஞவித்வான் பேசும்போது பண்டிதம்மந்யனை அல்பஜ்ஞன் வாய்மூடியிருக்க மாட்டாமல், தன்னையும் தத்துல்ய பண்டிதனென்று பிறர் நினைக்கவேணுமென்னுமாசையினுலும், வாளாவிருந்தால் தன்னை அஜ்ஞனுக நினைத்துவிடுவார்களென்னுமத்தாலும் இடையிடையே தான் குசோத்யங்கள்பண்ணி உடனுக்குடனே பங்கப்படுகிறான். யதாஜாதர்களாயிருக்கிற மற்றையோர்கள் உள்ளபடி தங்களை அறிவிலிகளாகவே நினைத்திருப்பதனுல் வாய்மூடியேயிருந்து பங்கப்படாதிருக்கின்றனர். பண்டிதம்மந்யன் பங்கப்படுவதற்கு ஹேது ஸ்வல்பஜ்ஞானமுடைமை. யதாஜாதன் பங்கப்படாமைக்கு ஹேது ஜ்ஞானுத்யந்தாபாவம். இதேபோல தேவப்பெருமாளுடைய மிகவுயர்ந்த தேஜஸ்ஸின் முன்னே ஸூர்யன் பங்கப்படுகிறான்; அமாவாஸ்யை பங்கமேதும் அடையாமலிருக்கின்றது. ஸூர்யன் பங்கமடைவதற்கு என்ன காரணம்? தன்னிடத்தில் ஸ்வல்ப தேஜஸ்ஸுடைமையே காரணம். அமாவாஸ்யை பங்கமடையாதிருப்பதற்கு எது காரணம்? தேஜஸ்ஸின் அத்யந்த பாவமே காரணம். ஆகவே அல்பதேஜஸ்கனுன ஸூர்யனிற்காட்டிலும் தேஜஸ்ஸின் லவலேசமுமற்ற அமாவாஸ்யையே கொண்டாடப்படுவதாகின்றது என்றதாயிற்று. ச்லாக்யேத என்னும் க்ரியைக்கு இப்பொருளில் தவிர மற்று எந்தப்பொருளிலும் பொருத்தம் காணஇயலாது. தேவப்பெருமாளுடைய தேஜஸ்ஸின் உயர்த்தியைப் பூர்வார்த்தத்தில் இரண்டு விசேஷணங்கள் நிலைநாட்டுவதால் நான்காவது பாதத்தில் கூறிய விஷயத்திற்கு அவை உபபாதகங்களாயின. அப்பயதீக்ஷிதர் தாம்செய்த வரதராஜஸ்தவத்தில் * பாநுர் நிசாஸு பவதங்க்ரிஸரோஜசோபாலோபாத் * இத்யாதியான

ச்லோகமிட்டிருப்பது இந்த ரஸ்யமான தாத்பர்யத்தை உட்கொண்டேயாம். [அந்த சுலோகத்தின் முடிவில் (ஸஹிமந்ததாப:) என்று வழங்கிவரும் பாடம் மிகத்தவறு; ''ஸஹி மந்ததாத:'' என்று திருத்துக. இது ப்ராஸங்கிகம்.]

24. (அதிலேயே. 43.) [த்வஞ்சேத் ப்ரஸீதஸி... ஸம்ஸார ஏஷ பகவந் அபவர்க்க ஏவ.] மேலே நாற்பத்தொன்பதாம் சுலோகத்தில் * வைகுண்ட வாஸேபி ந மேபிலாஷ:* என்றருளிச் செய்யப்போகிறுராதலால் இந்நிலமே எமக்கு வைகுண்டமென்கிறுரிதில். இருள் தருமாஞாலமானவிது எப்படி வைகுண்டமாகுமென்ன; சில கோரிக்கைகளை விண்ணப்பம் செய்கிறுர், நான் ஆர்த்ராபராதனுயிருக்கும்போதும் திருமுகத்தில் புன்முறுவல் மாருதேயிருக்கவேணும்; அடியேன் போவதும் வருவதுமாயிருக்கையன்றிக்கே ஒழிவில்காலமெல்லா முடனுய் மன்னியிருக்கவேணும்; மெய்யன்பு கொண்டிருக்கவேணும். இவையெல்லாவற்றுக்கும் மேற்பட பரஸ்பரஹிதைஷிகளோடே கலந்து பரிமாறப் பெறவேணும். இவ்வளவும் வாய்க்கப்பெறில் இம்மண்ணுலகே விண்ணுலகாகுமென்னத் தட்டில்லை என்றுராயிற்று.[இனி கோதஸ்துதியைப்பற்றி.]

25. (கோதாஸ்துதி-1.) [ஸ்ரீ விஷ்ணுசித்த குல நந்தன கல்பவல்லீம் இத்யாதி.] ஸ்ரீகுணரத்நகோசத்தில் ஸ்ரீரங்கநாச்சியாரைத் துதிக்கப் புகுந்த பட்டர் ''அநுகல தநுகாண்ட'' இத்யாதியான மூன்றுவது ச்லோகத்தில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை ஒரு கற்பகக் கொடியாக வருணித்துப் பேசின கணக்கிலே ஸ்வாமி தாமும் ஆண்டாளைக் கற்பகக் கொடியாக முதலடியிலேயே பேசப்புகுந்தார். கற்பகக் கொடியானது ஸகலார்த்தங்களையும் அளிக்கவல்லது. அதுபோலவே ஆண்டாளும் தனது திவ்யஸூக்திகள் வழியாக ஸகலார்த்தங்களையும் விளங்கச் செய்பவள் என்பது விவக்ஷிதம். தேவேந்திரனுடைய உத்யான வனத்திற்கு நந்தனமென்று பெயர். அங்குத் தான் கற்பகக் கொடி படரும். இவ்வாண்டாளாகிற கற்பகக் கொடியானது *வேயர் தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன் குடியாகிற நந்தனவனத்தில் தோன்றியதாம். பெரியாழ்வாருடைய திருக்குலம் ஆண்டாள்திருவவதாரத்திஞல் மிக்க பொலிவு பெற்றதென்பது கருத்து. கொடியானது ஒரு கொள்கொம்போடே அணைந்தல்லது நில்லாது; அது போல, இக்கோதைக்கொடியும் ஸ்ரீரங்கநாதனுகிற கற்பகத்தருவை யணைந்து விளங்காநிற்கும். ''எனக்கே தன்னைத்தந்த கற்பகம்'' என்று ஆழ்வார் எம்பெருமானைக் கல்பவ்ருக்ஷமாக அருளிச் செய்திருப்பது காண்க. அமரகோசத்தில் பஞ்சைதே தேவதரவோ மந்தார:, பாரிஜாதக:, ஸந்தான: கல்பவ்ருக்ஷச்ச பும்ஸி வா ஹரிசந்தனம் என்று ஐந்து வ்ருக்ஷங்கள் தேவவ்ருக்ஷங்களாகக் கூறப்பட்டன; அவற்றுள் ஏதேனுமொன்றைச் சொன்னுலும் ஐந்தும் சொன்னபடியாகுமென்பது கவிமரபு. (''ஸ்ரீரங்கராஜ ஏவ ஹரிசந்தன:- கல்பவ்ருக்ஷ:; தேநஸஹ யோகேந-நித்யஸம்யோகேந த்ருச்யாம்—ரமணீயாம். என்றபடி. * மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் * என்று உறுதிகொண்டபடியே எம்பெருமானையே கணவனுகப்பெற்றுப் பொலிந்தவளென்றபடி.

26. (அதிலேயே. 2.) இதில் ''மௌனத்ருஹோ முகரயந்தி குணாஸ் த்வதீயா:'' என்றவிடத்து ஓர் ஐதிஹ்யம் பெரியார் கூறுவதுண்டு. இந்த ஸ்துதிநூல் ஆசிரியரால் ஸ்ரீவில்லிபுத்தூரிலேயேயிருந்து அருளிச் செய்யப்பட்டது. ஸ்வாமி அங்கு த்ரயோதசியன்று எழுந்தருளி ஒரு வீதியில் ஒரு திருமாளிகையில் தங்கியிருந்தார். அன்று ஆண்டாளுடைய திருவீதிப்புறப்பாடு நடந்துகொண்டிருக்கிறது. இவர் எழுந்தருளியிருக்கும் வீதியில் அன்று ஆண்டாள் எழுந்தருளுகிற முறை இல்லை. அன்று மஹாப்ரதோஷமாகையால் மௌநவ்ரதத்தை ஸங்கல்பித்துக்கொண்டு திருமாளிகையிலேயே யெழுந்தருளியிருக்கையில், ஆண்டாளெழுந்தருளவேண்டிய திருவீதியில் அநுபபத்தி விளைய, திடீரென்று இந்த வீதியில் எழுந்தருள நேர்ந்துவிட்டது. அப்போது இவர் மஹாப்ரதோஷ ப்ரயுக்தமான மௌநவ்ரதத்தை ஸஹஸாவிஸர்ஜநம் செய்தருளி இந்த ஸ்துதியை விஜ்ஞாபிக்க உபக்ரமித்தாராயிற்று, அதையே

ஸஹஸைவ கோதே! மௌநத்ருஹோர முகரயந்தி குணாஸ் த்வதீயா:*என்கிறவிதனால் ஸூசிப்பித்தருளினபடி.

27. (அதிலேயே. 5.) [அஸ்மாத்ருசாமபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம்] இந்த சுலோகத்தின் கருத்தாவது 'கோதாய்! பகவத் பாகவதாபசாரங்களில் நெடுநாளாகவே ஊன்றியிருக்கின்ற என்போல்வார் விஷயத்திலும் எம்பெருமான் சடக்கென அருள் செய்கின்றனே! இதற்கு யாதுகாரணம்? என்று ஆராயுமிடத்து, நீர் சூடிக்கொடுத்த பூமாலையினாலும் பாடிக்கொடுத்த பாமாலையினாலும் அப்பெருமான் வசீக்ருதனாய் விட்டபடியாலே என்று நிச்சயிக்கப்பட்டது' என்பதாம். *அன்னவயற்புதுவையாண்டாள் * என்கிற தனியனைப் பெரும்பாலும் அடியொற்றி இந்த ச்லோகத்தின் உத்தரார்த்தம் அமைந்துள்ளது. ஆண்டாள் இரண்டுவகையான மாலைகளினால் எம்பெருமானைக் கட்டுப்படுத்தினள் என்கிறது. 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்று தனக்கு ப்ரஸித்தமாக வழங்கும் திருநாமத்திற்குரிய ஐதிஹ்யத்தின்படியும். *ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகலிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே கோதா* என்று பட்டர் அருளிச்செய்தபடியும் தான் சூடிக்களைந்த பூமாலையைத் தந்தும், தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகளைப் பாடித்தந்தும் ஆக இவ்விருவகையான மாலைகளாலே எம்பெருமானை உகப்பித்து, அவனைத் தன்னளவில் ஸர்வாத்மநா விதேயனாக ஆண்டாள் ஆக்கிக்கொண்டாள்; நம் போன்றவர்கள் யாவரும் பகவத் பாகவதாபசாரங்களில் நெடுநாளாகவே ஒருப்பட்டிருந்தும், ஆண்டாளுடைய பரிகரமாகையினாலே நம் குற்றங்களைக் கணிசியாமல் ஆண்டாள் பக்கலில் உள்ள அன்பே காரணமாக நம்மிடத்திலும் எம்பெருமான் க்ருபைபண்ணும்படியாகின்றது என்றருளிச் செய்தாராயிற்று. கொடியபாவிகளான நாமும், ஆண்டாளுடைய அபிமானத்திலே ஒதுங்கப்பெறில் எம்பெருமானுடைய திருவடிகளுக்குத் தவறாது இலக்காகலாம் என்பது இதில் ஸூசிதம். முக்கியமாக "அன்ன வயற்புதுவையாண்டாள்" என்னும் திருப்பாவைத் தனியனை யநுஸந்தித்துக்கொண்டே இந்த சுலோகத்தை யருளிச் செய்தாரென்னத் தட்டில்லை.

28. (அதிலேயே. 6,) * சோணாதரேபி குசயோரபி துங்கபத்ரா* இத்யாதி. இதில், சோணா, துங்கபத்ரா, ஸரஸ்வதி, விரஜா, கோதாவரீ, நர்மதா என்கிற ஆறு மஹாநதிகளின் பெயர்கள் பொருளுக்குப் பொருந்த அவலீலையாகத் தொடுக்கப்பட்டது ஓர் அற்புதம். அதற்குமேல், அபிசப்தத்தை ஐந்து விசை பிரயோகித்திருக்குமழகை நோக்கும்போது சோணா அபி துங்கபத்ரா; துங்கபத்ரா அபி ஸரஸ்வதீ; ஸரஸ்வத்யபி விரஜா; விரஜாபி கோதா (கோதாவரீ), கோதா அபி நர்மதா. என்றிங்ஙனே வாக்ய விந்யாஸம் ஸ்வாமிக்கு விவக்ஷிதமென்று தெரியவருகின்றது. இதர கவிகளுக்கு மஹாப்ரயாஸத்தாலும் இங்ஙனே ரசனை அமையாது.

29. (அதிலேயே. 7.) * வல்மீகதச் ச்ரவணதோ வஸுதாத்மநஸ் தே* இத்யாதி, தைத்திரீயயஜுர் ப்ராஹ்மணத்தில் "ச்ரோத்ரம் ஹ்யேதத் ப்ருதிவ்யா:, யத் வல்மீக:" என்று ஓதப்பட்டுள்ளது. இதன் பொருளாவது நிலத்தில் தென்படும் புற்றானது பூமிதேவியின் காது என்றபடி. ஆண்டாள் பூமிப்பிராட்டியின் அம்சமாதலால் பூமியென்றே கொள்ளத் தகுதியுடையவள், ஆகவே புற்று இவளுடைய காதாக ஆயிற்று, புற்றில் நின்றும் தோன்றிய வால்மீகி முனிவர் ஆண்டாளுடைய காதில் நின்றும் தோன்றினவரென்று சொல்வதற்கு உபபத்தி ஏற்பட்டுவிட்டது. இங்ஙனம் உமது காதில் நின்றும் தோன்றிய ஒருவர், கவியரசர் என்று உலகமெங்கும் புகழ்பெற்றிருப்பதும், அவருடைய பிரபந்தமாகிய ஸ்ரீராமாயணம் மதுரமென்று புகழ் பெற்றிருப்பதும் அபலபிக்கவொண்ணாத விஷயங்களாகும். உலகத்தில் ஒருவருடைய காதில் நின்று உண்டான வஸ்துவுக்கு [குறும்பிக்கு] ஓர் அதிசயம் ஏற்படுவது அரிது. உம்முடைய காதின் பெருமையோ லோகவிலக்ஷணமாயுள்ளது. காதினுடைய பெரு

மையே இதுவானல் திருவாக்கின் பெருமையைப் பற்றிப் பேசத்தானுவதுண்டோ? உமது திருவாயோ அரவிந்தம்; அரவிந்தத்தில் மகரந்தம் ஸ்ரவிப்பது ஸஹஜமே யாதலால், மகரந்தம் போன்ற திவ்ய ப்ரபந்தங்கள் உமது திருவாக்கில் நின்றும் தோன்றினவென்பதில் வியப்பு ஒன்றுமில்லை கிடீர், ஸ்ரீராமாயணத்திற்கு ஏற்பட்டிருக்கும் போக்யதையைப்''ற்றிச் சிறிது வியக்கவேண்டுமேயல்லது உம்முடைய திவ்ய ப்ரபந்தங்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற போக்யதையைப் பற்றிச் சிறிதும் வியக்க வேண்டிய ப்ரஸக்தியில்லை என்பது உள்ளுறை. இதனுல், வால்மீகி கோகிலத்தின் சொற்களிலுங்காட்டில் கிளிமொழிக் கோதையின் சொற்களே பரம மதுரங்கள் என்பது பெறுவிக்கப்பட்டது.

30. (அதிலேயே-8.) [போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே!] ஆண்டாள்தான் ஆழ்வார்களுக்கும் வழிகாட்டியாயிருந்தாளென்கிறது இந்தச்லோகத்தில்.(கருத்தாவது,) ஆண்டாளே! உம்முடைய திருத்தகப்பன்மார்களான பெரியாழ்வார் முதலிய ஆழ்வார்கள் உமது வல்லபரான பெருமாளை நீர் அநுபவிப்பது போலவே தாங்களும் அநுபவிக்க விரும்பித் தங்களுடைய பக்தியை அநுராகசைலியிலே மாற்றிப் பேசா நின்றவர்களாய்ப் பலவகைப்பட்ட ஸம்ச்லேஷ விச்லேஷப் பாசுரங்களினுல் தமது திருவுள்ளத்தை ச்ருங்கார ரஸாநுபவசாலியாக ஆக்கிக்கொள்கிருர்கள் என்பதாம்.

31. ஆண்டாள் இயற்கையில் பெண்ணுய்ப் பிறந்தவள்; புருஷனைப்புருஷர்கள் அநுபவிப்பதிற்காட்டிலும் பெண்டிர் அநுபவிப்பது பாங்குடைத்தாதலால் புருஷோத்தமனை பெருமாளை ஸ்த்ரீரத்னமான ஆண்டாளனுபவிப்பது பாங்காக அமைந்தது. அமையவே, இவளுடைய திவ்யப்ரபந்தத்தில் ''ஊனிடையாழி சங்குத்தமற்கென்று உன்னித்தெழுந்த வென்தடமுலைகள்'' என்றும், ''கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள், தங்குமேல் என்னுவி தங்குமென்றுரையீரே'' என்றும் ''கொள்ளும்பயனென்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும், அள்ளிப் பறித்திட்டவன் மார்பிலெறிந்து என்னழலைத் தீர்வேனே'' என்றும் ''கொம்மை முலைகளிடர்தீர'' என்றும் உள்ள பாசுரங்கள் பொருத்தமாகவும் ஹ்ருதயங்கமமாகவும் விளங்கின. இங்ஙனம் ஆண்டாளைப் போலவே புருஷோத்தமனை நாமும் அநுபவிக்க வேணும், நாமும் பாசுரமிட்டுப் பேசவேணும்-என்று ஆசைகொண்ட ஆழ்வார்கள் என்செய்தார்களென்னில், பரமபுருஷ விஷயத்திலே தங்களுக்குண்டான பக்தியை நாயகவிஷயத்தில் நாயகிகளுக்குண்டாகும் அநுராகத்தின் ஸமாதியிலே அமைத்து, தாங்களும் ஸ்த்ரீபாவனை கொண்டவர்களாகி எம்பெருமானேடு உண்டாகும் ஸம்ச்லேஷவிச்லேஷங்களுக்கு அநுரூபமான பாசுரங்களையும் பேசி, இங்ஙனே தங்களுடைய ஹ்ருதயத்தையும் ச்ருங்கார ரஸைகதாநமாக ஆக்கிக்கொண்டார்கள் என்றதாயிற்று. இத்தால், அநுகாரரீதியிலே அமைந்த ஆழ்வார்களின் பகவதநுபவத்திற்காட்டிலும், தன் இயற்கைக்கு இணங்கினதாகவே அமைந்த ஆண்டாளுடைய பகவதநுபவம் ரஸவத்தரம் என்பது பெறப்படும்.

32. அதில் குரவஸ் த்வதீயாः என்றவிடத்தில் சில விவக்ஷிதங்கள் கேளீர்; இங்குள்ள குருசப்தம் பித்ருபர்யாயம், பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே! என்று நாடோறும்ஸ்ரீவைஷ்ணவவுலகம் ஸேவிக்கிற வாழித் திருநாமத்தின்படி ஆண்டாள் பெரியாழ்வார் திருமகளென்று ப்ரஸித்திபெற்றிருந்தாலும் ஆழ்வார்கள் பதின்மருக்கும் இவள் ஒரு திருமகள் என்பது பூருவாசாரியர்களின் ஒருமிடருன திருவுள்ளம். அதையடியொற்றியே ஸ்வாமி இங்கு குரவஸ்த்வதீயா: என்றருளிச் செய்தபடி, மணவாளமாமுனிகளும் உபதேசரத்தினமாலையில் *அஞ்சுகுடிக்கொரு சந்ததி*என்றருளிச் செய்கிருராண்டாளை; அஞ்சுகுடியென்ற விதற்கு இரண்டு வகையான பொருள் ஏற்கும்; பொய்கையாழ்வார் தொடங்கிப் பெரியாழ்வாரளவுமுள்ள ஆழ்வார்களைக் கணக்கிட்டால் அவ்வாழ்வார்களின் குடி ஐந்து என விளங்கும். எங்ஙனே யென்

ணில். பொய்கை பூதம் பேயாழ்வார் மூவரும் சேர்ந்து முதலாழ்வார்களென்று ஒரு ஸமுதாயமாக வழங்கப் பெறுதலால் அம்மூவருஞ் சேர்ந்து ஒரு குடி; திருமழிசைப் பிரான், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார் ஆகிய நால்வரும் நான்கு குடி. ஆகவே அஞ்சுகுடியென்பது ஆண்டாளுக்கு முன்னே திருவவதரித்த ஆழ்வார்களனைவரையும் சொல்லிற்றாகி அவர்கட்கெல்லாம் ஒரு சந்ததியாகத் தோன்றியவள் ஆண்டாள் என்றதாக ஒரு நிர்வாஹம். இனி மற்றொரு நிர்வாஹமாவது—அஞ்சுகுடி யென்பதை அஞ்சுகின்ற குடி எனக்கொண்டு ஆழ்வார்கள் பதின்மரையும் விவக்ஷிக் கிறபடி; எம்பெருமானுக்கு என் வருகிறதோவென்று அஞ்சுகின்ற தன்மை பெரி யாழ்வார்க்கு மிகவும் விசேஷித்து இருப்பினும் ஆழ்வார்கள் பதின்மர்க்கும் அந்த அச்சம் ஸாதாரணமாகவுண்டு, இது "மங்களாசாசனத்தில் மற்றுள்ள வாழ்வார் கள் தங்கள் ஆர்வத்தளவுதானன்றி" என்ற உபதேசரத்தினமாலைப் பாசுரத்தினு லேயே நன்கு காட்டப்பட்டது. பெரியாழ்வார்க்குப்போலே பொங்கும் பரிவு மற்றையோர்க்கு இல்லை யெனினும், மங்களாசாசனத்தில் ஆர்வம் [அதாவது, அஞ்சுகின்ற தன்மை] அனைவர்க்குமுண்டு என விளங்குதலால், அஞ்சுகுடி யென்ற சொல்லால் ஆழ்வார்களனைவரையும் கொள்வது பொருத்தமுடையதேயாகும். ஆகவே பதின்மர்க்கும் ஆண்டாள் புதல்வியென்றதாயிற்று. ஆக, (குரவஸ் த்வதீயாඃ) என்றவிது ஆழ்வார்கள் பதின்மரையுமே சொல்லிற்றாகும். சில ஆழ்வார்களுக்கு (பக்திம் நிஜாம் ப்ரணயபாவநயா க்ருணந்தඃ) என்கிற அம்சம் இல்லையானாலும், ச்சத்ரி ந்யாயத்தாலே அவர்களையும் கூட்டிக் கூறக் குறையில்லை.

33. (அதிலேயே-10.) [தாதஸ் து தே மதுபிதඃ.] இந்த சுலோகத்தின் கருத்தாவது, ஆண்டாளே! உம்முடைய திருத்தகப்பனாராகிய பட்டர்பிரான், ஸ்வல்ப ஸ்தோத்தி ரத்திற்கு வசப்படக் கூடியவனான எம்பெருமானிடத்தில் நின்றும் செவிக்கினிய செஞ் சொற்களை நூற்றுக்கணக்காகப் பாடின மற்றையாழ்வார்களாலே முன்பு அடையப் படாததான பெரியாழ்வாரென்னும் சிறப்புப்பெயரை நீர் சூடிக்களைந்த மாலையை ஸமர்ப்பித்ததனால் அடைந்தார் என்பதாம். ஆழ்வார்களுக்குள்ளே ஆண்டா ளுடைய திருத்தகப்பனாரான பட்டர்பிரான் பெரியாழ்வாரென்று வழங்கப்படா நின்றார். இவ்வாழ்வார்க்கு எந்த அம்சத்தினால் பெருமை என்று ஆராயவேணும். மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்துதித்தவர்களான முதலாழ்வார்களும் திரு மழிசைப்பிரான் நம்மாழ்வார் முதலானவர்களும் இவரைக் காட்டிலும் திருநக்ஷத் திரத்தில் பெரியவர்களாதலால் வயதினால் பெருமை இவர்க்குச் சொல்லவொண் ணாது. இனி எண்ணிக்கையில் அதிகமான பாசுரங்களை அருளிச்செய்வதனாலாகும் பெருமையாவது சொல்லத்தகுமோவென்று பார்க்கில், அவ்விஷயத்தில் நம்மாழ் வாரும் திருமங்கையாழ்வாருமே பெருமை பெற்றவர்களாவர். ஆகவே, எக்காரணத் தினால் இப் பட்டர்பிரானுக்குப் பெரியாழ்வாரென்றபெயர் வழங்கலாயிற்றென்று உணரவேண்டுவது அவசியமாயிற்று, ஆண்டாள் சூடிக்களைந்த பூமாலையை இவ் வாழ்வார் எம்பெருமானுக்கு நாடோறும் ஸமர்ப்பித்து வந்ததனால் மிகவும் திரு வுள்ளமுவந்த எம்பெருமான் இவர்க்குப் பெரியாழ்வார் என்று விருது உண்டாகும் படி அருள்புரிந்தனன் என்கிறது இதில்.

34. இங்கே ஒரு விஷேச விமர்சம். இந்த ச்லோகத்தில் இரண்டாவது பாதத் தை "கர்ணம்ருதைඃ ஸ்துதிசதைඃ" என்று வ்யஸ்தமாக ஓதிவருகிறார்கள். இது புராதனபாடமன்று. "கர்ணம்ருதஸ்துதிசதைඃ" என்று ஸமஸ்தமாகவே ஆசிரியர் பணித்தது. அது பஹுவ்ரீஹி கர்ப்பமான பதமென்பதையுணராமல் இங்கு கர்ம தாரய ஸமாஸமென்றெண்ணி ஸமஸ்தமாயிருப்பதிற்காட்டிலும் வ்யஸ்தமாயிருப் பதே யுக்த்தரமென்றெண்ணி "கர்ணம்ருதைඃ ஸ்துதிசதைඃ" என்று திருத்திவிட்டார் கள். நம்முடைய தேசிக க்ரந்தமாலா ஸ்தோத்ராவளீ விபாகப்பதிப்பிலும் அப்

பாடத்தையே நிவேசித்திருக்கிறோம். ஆனால் அது ஆசிரியருகந்தபாடமன்று என்பதை நம்முடைய கோதாஸ்துதி வியாக்கியானத்தில் நிரூபணம் செய்திருக்கிறோம். இங்கு ஸாரமாகத் தெரிவிக்கிறோம். "கர்ணாம்ருதாநி ஸ்துதிசதாநி யேஷாம் தே- கர்ணாம்ருதஸ்துதிசதா:; தை:. என்று விக்ரஹமாகக்கடவது. கர்ணாம்ருதமான ஸ்துதிசதங்களைப் பாடின மற்றையாழ்வார்களாலும் [நம்மாழ்வாராலுங்கூட] அடையப்படாததான அநுக்ரஹத்தை இவ்வாழ்வார் பெற்றார் என்பது இங்கு விவக்ஷிதம். * இன்கவிபாடும் பரமகவிகளென்று சிறப்பித்துக் கூறப்பட்ட முதலாழ்வார்களுக்கும், * பாலேய்தமிழரிசைகாரர்பத்தர்பரவுமாயிரம் * * தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன் * என்றும் சொல்லுகிறபடியே கர்ணாம்ருத ஸ்துதி ததிகளைப்பாடின நம்மாழ்வார்க்கும், மற்றும் இத்தகையரான திருமழிசைப் பிரானுக்கும் குலசேகரப் பெருமாளுக்கும் கிடைக்காததான அநுக்ரஹத்தை ஆண்டாள் சூடிக்களைந்தமாலையை உபஹரித்ததுகாரணமாக இவ்வாழ்வார் பெற்றார் என்பதுதான் இன்சுவைமிக்க பொருள். இப்பொருளுக்கு வ்யஸ்தபாடம் சேராது; ஸமஸ்தமானபாடமே சேரும்.

35. அன்றியும் வ்யஸ்தமான பாடத்தில் பிரபலமானவொரு அநுபபத்தியுமுண்டு. பெரியாழ்வார் தம்முடைய திவ்யஸூக்திகளையெல்லாமருளிச் செய்தபிறகே ஆண்டாள் சூடிக்களைந்த மாலையை வடபெருங்கோயிலுடையானுக்கு ஸமர்ப்பித்ததாக வ்யஸ்தபாடத்தில் ஏற்படும். அது அஸங்கதம். பெரியாழ்வார் திருமொழியில் (2—2—6) * மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்த வண்டு, இன்னிசைக்கும் வில்லிபுத்தூரினிதமர்ந்தாய்!* என்கிற பாசுரத்தில் ஸூசிதமான இதிஹாஸம் முற்பட்டதேயொழியப் பிற்பட்டதன்று. ஆதலாலும் வ்யஸ்த பாடம் சேராது. சிறவாது.

36. (அதிலேயே-11.) [திக் தக்ஷிணாபி....ஸர்வோத்தரா பவதி தேவி! தவாவதாராத்.]

ஆலங்காரிகர்கள் விரோதாபாஸ மென்றொரு விநோதமான அலங்காரம் கூறுவர்கள் சதுரர்களான கவிகளின் வாக்கில் இது நன்கு இடம்பெறும். கீழே விவரித்த "சோணாதரேபி" என்கிற சுலோகத்திலும் விரோதாபாஸம் காணநின்றதெனினும் இந்த சுலோகம் மிகவினிது. மேலெழப் பார்க்குமிடத்து விரோதமுள்ளதுபோல் தோன்றி, ஆழ்ந்து பார்க்குமிடத்து விரோதம் காணாதபடி பேசுவதே விரோதாபாஸ லக்ஷ்யம். இந்த சுலோகம் அங்ஙனே அமைந்துள்ளது. ஆண்டாள் திருவவதரித்தது ஸ்ரீவில்லிபுத்தூரில். அவ்வூர் உள்ளது தென் திசையில். அது தென் திசையாயிருக்கச்செய்தேயும் வடதிசையாகவிருக்கின்றதென்று காட்டி விரோதாபாஸாலங்காரம் தோன்ற ஒரு சமத்காரமாக அருளிச் செய்கிறார். உத்தரா என்கிற வடசொல் வடதிசையைச் சொல்வது போலவே, 'சிறந்தது' என்னும் பொருளையும் சொல்வதாதலால் முந்தின பொருளைக்கொண்டு விரோதோத்பாவநமும், பிந்தின பொருளினால் அதற்குப் பரிஹாரமும் உய்த்துணரத்தக்கது. ஆண்டாளுடைய திருவவதாரத்தினால் தென் திசை மிகவும் சிறந்ததாயிற்று என்றவாறு. அந்தச்சிறப்பை ஸமர்த்தித்து உத்தரார்த்தம் அருளிச்செய்கிறார்—(யத்ரைவ) என்று தொடங்கி. "குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டித் தென்திசையிலங்கை நோக்கி" என்றும் "மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்கண்வைத்த" என்றும் சொல்லுகிறபடியே பெரிய பெருமாள் தென்திசை நோக்கிப் பள்ளிகொண்டிருப்பதானது விபீஷணாழ்வானைக் கடாக்ஷிப்பதற்காக என்று புராண வரலாறு இருந்தாலும், ஆண்டாளுடைய திருவவதாரஸ்தலமாகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் அபிநிவேசத்தினால்தான் அத்திசையை நோக்கியிருக்கின்றாரென்று கொள்வது சிறக்கும் என்று இங்கு ஆசிரியர்திருவுள்ளம் பற்றினபடி.

37. (அதிலேயே-12.) [ப்ராயேண தேவி! பவதீவ்யபதேசயோகாத் கோதாவரீ ஜகதிதம் பயஸா புநீதே.] இந்த சுலோகத்திலே அற்புதமான ஓர் உல்லேகமுள்ளது. பஞ்சவடியில் இராவணன் பிராட்டியை அபஹரித்துக்கொண்டுபோகும்போது * (ஹம்ஸ காரண்ட வாகீர்ணும் வந்தே கோதாவரீம் நதீம், க்ஷிப்ரம்ராமாய சம்ஸத்வம்ஸீதாம் ஹரதி ராவண:* என்று கோதாவரியை நோக்கி 'என்னை இராவணன்கவர்ந்து சென்றதைப் பெருமாளிடம் அறிவிப்பாயாக' என்று வேண்டிக்கொண்டாள்; அங்ஙனம் வேண்டிக்கொள்ளாவிடினும் பெருமாள் பக்கலில் அறிவிக்க வேண்டிய முறைமை இருந்தும், வேண்டிக்கொண்ட பின்பும் அறிவியாதேயொழிந்தது. இது இராவணன் பக்கலில் அச்சத்தாலேயாம் யமுனை கம்ஸனுடைய மாளிகையின்கீழேபெருகா நின்றதாகையாலே தீயபுந்திக்கஞ்சனுக்கு அஞ்சவேண்டியிருந்தும் அஞ்சாதே (யமுநாம் சாதி கம்பீராம் நாநாவர்த்தஜஷாகுலாம் வஸுதேவோவஹந்க்ருஷ்ணம் ஜாநுமாத்ரோதகோயயௌ*,என்னும்படி முழங்காலளவாகத் தன்னை வற்றிக்கொடுத்தது;ஆதலால் அது*தூய பெருநீர் யமுனை* என்று கோதை குலாவிக் கூறப்பெற்றது ; அங்ஙனம் கிஞ்சித்கரிக்கும்படியான பாக்கியத்தைக் கோதாவரி இழந்தமையால் அபரிசுத்தியே இதற்கு உண்டாயிற்று. அந்த அசுத்தி தொலைந்து தூய்மைபெறுதற்காக அந்தக் கோதாவரி தவம் புரிந்ததாகவும், தவத்தினால் ப்ரஸந்நமான தேவதை ஒப்புயர்வற்ற தூய்மையை வரமாக அநுக்ரஹித்ததாகவும் புராணவரலாறு உள்ளது. அவ்வளவு தூய்மை அதற்கு உண்டானதற்கு உண்மையில் யாது காரணமென்னில் ; கோதா என்கிற திருநாமத்தைத் தன்னுடைய நாமத்தில் ஏகதேசமாக வஹிக்கப் பெற்றிருப்பதுவே காரணமாகும் என்று ஸ்வாமி சமத்காரம்பொலிய உத்ப்ரேக்ஷிக்கிறபடி. ''தந்நாமகந்தாத் நளகூபரம் ஸா'' என்ற நைஷதம் ஸ்மரிப்பது.

38. (அதிலேயே-21.)[ரங்கேச்வரஸ்ய தவ ச ப்ரணயாநுபந்தாத்.] விவாஹ காலங்களில் தம்பதிகளுக்கு மாலை மாற்றுதல் நடைபெறும்முறைமையின்படியே ஆண்டாளுடைய திருக்கல்யாணத்திலும் அது நடைபெற, குழாங்கூடிக் கண்டுகளிக்கப் பலர் திரள்வர்களே. அந்தத் திரளில் ரஸிகராயிருப்பார் வாளா விருக்ககில்லாமல் தம்தம் நெஞ்சில் தோற்றியவாறு சொல்லுவர்கள். இராமனுக்கும் ஸீதைக்கும் திருமணம் நடந்தகாலத்தில் "நம்பியைக் காண நங்கைக்கு ஆயிர நயனம் வேண்டும்'' என்று சிலர் கூறினதாகவும், ''கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கு மன்னதேயாம்" என்று சிலர் கூறினதாகவும் கம்பர் பேசினாரன்றோ? அப்படியே இங்கும் எம்பெருமானைத் தாழ்த்தி ஆண்டாளை உயர்த்திப் பேசுவாரும், ஆண்டாளைத் தாழ்த்தி எம்பெருமானை உயர்த்திப் பேசுவாரும், இருவரும் ஏற்றத் தாழ்வின்றியே ஸமமாகவே விளங்குகின்றனர் என்று பேசுவாருமாய் இங்ஙனே பேச்சுக்கள் அதிகரித்துப் பேரொலி யுண்டாயிற்று என்பதாம். எம்பெருமானையும் பிராட்டியையும் அநுபவிக்கின்ற ஆசாரியர்கள் மேற்குறித்த மூவகையான பேச்சுக்களையும் தமது திவ்யக்ரந்தங்களிற் பேசியுள்ளார்கள்.

39. எங்ஙனேயென்னில், எம்பெருமானுக்கு ஸகலஜகத்பதித்வப்ரயுக்தமான ஏற்றமும், பிராட்டிக்கு பத்நீத்வப்ரயுக்தமான தாழ்வும் அபலபிக்க வொண்ணாதவை. ஆகவிப்படி சாஸ்த்ரீயமான ஏற்றத்தாழ்வு இருக்கச் செய்தேயும், ஒரு அபிமாந விசேஷத்தினால் "ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" என்று எம்பெருமானும் சொல்லி வைத்த கணக்கிலே, பிராட்டியை உயர்த்தியும் எம்பெருமானைத் தாழ்த்தியும்—இருவரையும் ஸமதுலையிலே வைத்தும் ஆசார்யர்கள் ரஸமயமாக அருளிச் செய்வதுண்டு. அதைச் சிறிது விவரிப்போம்.

40. பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தில் * ச்ரியம் த்வத்தோப்யுச்சைர் வயமிஹ பணும:* என்று அருளிச் செய்தது ப்ரஸித்தம், எம்பெருமானும் மோக்ஷோபாயம், பிராட்டியும் மோக்ஷோபாயம் என்று ஸமமாகச் சிலர் சொல்லுவதும் ப்ரஸித்தம்.

இப்புடைகளிலே ஆண்டாள் திருக்கல்யாணத்திலும் ரஸிகர்களுள் சுவைமிக்க பேச்சு பலவிதமாக நிகழ்கின்றதாம். "இப்பெருமானுக்கு எங்களுடைய ஆண்டாள் தேவியாக வாய்க்காவிடில் இவனுடைய புருஷோத்தமத்வம் காசுக்கு உதவுமோ?" என்று பெண்வகுப்பினர் பேசுவர்; உங்களுடைய ஆண்டாளுக்கு எங்கள் பெருமான் மணவாளனாக வாய்க்காவிடில் "கோங்கலரும் பொழில் மாலிருஞ்சோலையிற் கொன்றைகள் மேல் தூங்கு பொன் மாலைகளோடுடனாய் நின்று தூங்குகின்றேன்" என்று இவள் தானே சொல்லிக்கொண்டபடி இவள் உபயோகமற்றவளாக ஆய்விடுவளன்றோ' என்று பேசுவர் மணமகன் வகுப்பினர். இரு வகுப்பிலுஞ் சேராத தடஸ்தர்கள் ,ஏற்றத் தாழ்வு பேசுவதில் நமக்கென்ன யோக்கியதை, என்று கொண்டு இருவரையும் பற்றி ஸமமாகப் புகழ்ந்து பேசுவர்கள்; ஆனால் ஸமமாகப் பேசுகிற வார்த்தை எடுபடாது. ஏற்றத்தாழ்வான வார்த்தையில் கக்ஷி ப்ரதி கக்ஷிகள் விரைவில் மலிந்து பெரிய இரைச்சலாக ஆய்விடும். அது (த்ரிலோகீம் வாசாலயந்தி) என்பதனால் காட்டப்பட்டது. தம்பதிகளுள் ஒரு வ்யக்தியினிடத்திலும் சிறிதும் விரோதமின்றியே இவை விநோதவார்த்தைகளே என்பதை ரஸிகா: என்ற அழகிய சொல்லால் ஸூசிப்பித்தருளினார். இதில் காட்டிய ந்யூநாதிகத்வ ஸமத்வங்கள் மூன்றும் சாஸ்த்ரார்த்தங்களே யென்க.

41. (அதிலேயே-28.) "பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷநிஷேவ்யம் ச்ரவணயோ:" என்று பட்டரருளிச் செய்தபடி செவிக்கினிய செஞ்சொல் வாய்த்திருப்பது மிகப் பெரிய விசேஷம். இதில் எல்லா ச்லோகங்களுமே செவிக்கினியவையெனினும், "சதமகமணிநீலா சாருகல்ஹாரஹஸ்தா, ஸ்தநபர நமிதாங்கீ ஸாந்த்ரவாத்ஸல்யஸிந்து:, அலகவிநிஹிதாபிஸ் ஸ்ரக்பிராக்ருஷ்டநாதா விலஸது ஹ்ருதி கோதா விஷ்ணுசித்தாத்மஜா ந:" என்கிற இந்த சுலோகமானது செவிக்கினிமையில் ஈடுமெடுப்புமில்லாதது. இந்த சுலோகமொன்றையே ஸுப்ரபாதத்தில் நித்யாநுஸந்தானம் செய்து போருமவனடியேன்.

42. ஸ்ரீயதோக்தகாரிஸ்தோத்ரத்தில் சில சுலோகங்களின் இன்சுவை மிக்க பொருள்களையநுபவிப்போம். ஸ்ரீ காஞ்சீபுரிக்கு நடுநாயக மணியாய் விளங்குபவர் ஸ்ரீயதோக்தகாரிப் பெருமாள். தமிழில் சொன்ன வண்ணஞ்செய்த பெருமாளென்று வழங்கப்படுபவர். "சதுமுகனார் வேள்விதனைச் சதிர் கெடுக்கச் செறிந்தோடுங் கதியுடைய வேகவதிக்கு அணையாக வந்துதித்தோய்!" என்கிறபடியே எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பதற்காக அயன் புரிந்த அயமேத வேள்வியைக் கெடுக்க வெண்ணின ஸரஸ்வதியானவள் வேகவதீ ரூபத்துடனே பெருவெள்ளங் கோத்துப் பெருக, யாகத்தில் ஸ்வாஹாகாரம் அடங்கி ஹாஹாகாரம் அபிவிருத்தி யடைந்தவளவிலே "இவ்விடையூறு தன்னை நீக்கியருளவேணும்" என்று அந்த நான்முகன் பிரார்த்திக்க, அவனது வேண்டுகோளின்படி அணையாக வந்துதித்து இடையூறு நீக்கியருளின காரணத்தினால் "யதோக்தகாரீ" என்று திருநாமமாயிற்று இப்பெருமானுக்கு. அன்றியும், திருமழிசையாழ்வார் கணிகண்ணனென்னும் அந்தேவாஸியுடன் இத்தலத்தி லெழுந்தருளியிருந்த காலத்துப் பல்லவராஜனுடைய கொடுங்கோன்மையினால் அக்கணிகண்ணனும் ஆழ்வாரும் வெளியேற நேர்ந்தபோழ்து "கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி மணிவண்ணா! நீ கிடக்கவேண்டா.... நீயுமுன்றன் பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்று முன்பும், "கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி மணிவண்ணா நீகிடக்கவேண்டும்...............நீயுமுன்றன் பைந்நாகப்பாய் விரித்துக்கொள்" என்று பின்பும் ஆழ்வார் பிரார்த்தித்தபடியே பைந்நாகப்பாய் சுருட்டிக்கொண்டு புறப்பட்டெழுந்தருளினதையும் மீண்டு வந்து சாய்ந்தருளினதையும் பற்றி யதோக்தகாரி யென்று திருநாமமாயிற்று. இதில் நான்காவது சுலோகமொன்றில் மட்டுமே யதோக்தகாரி நாமநிர்தேசமுள்ளது. பலச்ருதியான நிகமனச்லோகத்தில் * யதோக்தம் குருதே ஹரி:" * என்றருளிச் செய்தது இன்சுவை மிக்கது.

43. (யதோக்த-1.) முதல் சுலோகத்தின் ரஸகனமான கருத்து ;—உலகில் அடையப்படும் பொருள் உபேயமென்றும், அடைவிக்குமது உபாயமென்றும் வழங்கப்படும். உபேயமென்பதும் ப்ராப்யமென்பதும் பலன் என்பதும் பரியாயம்; ஸாதனமென்பதும் உபாயமென்பதும் ப்ராபகமென்பதும் பரியாயம். உபாயம் வேறுயும், உபேயம் வேறுயும் இருப்பது உலகிற்காணுமியல்பு. எம்பெருமான் விஷயத்தில் இது மாறுபட்டிருக்கும். அவனை உபேயமாகக் கொண்டவர்கள் அவனையே உபாயமாகவும் கொள்வர். "உபாயோபேயத்வே ததிஹ தவ தத்வம் ந து குணௌ" என்றருளிச்செய்தார் பட்டர். கர்மஜ்ஞான பக்த்யாதிகள் உபாயமென்று கொள்ளத்தக்கவையாயிருந்தாலும் அவை அஜ்ஞர்க்கு உபாயமாய் ஜ்ஞானிகளுக்கு அபாயமாயிருக்குமவை யாகையாலே ஹேயமாகி உபேயனுன எம்பெருமான் தானே உபாய பூதனும் நிற்பன் பரமைகாந்திகளுக்கு. தேவப்பெருமாளாகிற ஒரு திருக்கோலமே உபாயமாயும் உபேயமாயுமிருக்கச் செய்தேயும் ஒரு திருக்கோலத்தாலே உபாய பாவத்தையும் மற்றுெரு திருக்கோலத்தாலே உபேய பாவத்தையும் காட்டுவோமென்று திருவுள்ளம்பற்றி வேகவதியினிடையே யதோக்த காரியாகத் திருவவதரித்து உபாயபாவத்தைக் காட்டியும், திருவத்திமா மலையிலே தேவப் பெருமாளாகத் திருவவதரித்து உபேயபாவத்தைக் காட்டியும் ஸேவை ஸாதிப்பதாகச் சொல்லுகிறவிது சமத்காராதிசயம் பொலிந்த சாடூக்தி. உபாயோபேயத்வங்களிரண்டும் இரண்டு திருக்கோலங்களிலும் தனித்தனியே குறையற்றதே. ஆயினும் இங்ஙனே நியமித்துச் சொன்னது கதைக்குச்சேரும்.

44. (யதோக்த. 2.) இந்த ச்லோகம் ச்லேஷாலங்காரமமைய அருளிச் செய்யப்படுகிறது. ஸ்ரீயதோக்தகாரி யெம்பெருமானுக்கு வடமொழியில் வேகாஸேது வென்றும், தென்மொழியில் வெஃகணை யென்றும் திருநாமம். வெஃகணை யென்பதே வெஃகாவென்று தொக்கிநிற்கிற தென்பர். வேகாஸேது வென்கிற திருநாமத்தை நினைக்கும்போதே *அம்ருதஸ்யைஷ ஸேதுः* இத்யாதிகளான உபநிஷத் வாக்யங்கள் நினைவுக்கு வரும். வேதாந்தங்களில் ஸேதுவாக ஓதப்பட்டுள்ள எம்பெருமான் இங்கு ப்ரத்யக்ஷ ஸேதுவாக ஸேவைஸாதித்திருக்கின்றுனென்று அநுஸந்திக்க ப்ராப்தம். வேதாந்தவ்யபதிஷ்ட ஸேதுவான பகவானிடத்திலே [ஸாரஸ்வதம் ஸ்ரோதः விச்ருங்கலம் விச்ராம்யதி] ஸரஸ்வதீ ப்ரவாஹமானது விச்ருங்கலமாக விச்ரமிக்கும் ; ஸகலவாக்ப்ரபஞ்சமும் பகவானிடத்திலே முக்க்யவ்ருத்த்யா பர்யவஸித்து நிற்குமென்கை. இந்த வேகாஸேது பகவான் பக்கலிலோ வென்னில், விச்ருங்கலமாகப் பெருகியோடிவந்த ஸரஸ்வதீ நதியின் வெள்ளம் தடைபட்டொழிந்ததென்கை. [அபங்குரः ஏஷ ஸேதுः] உலகில் நதிகளுக்குக் கட்டும் அணைகள் என்றேனுமொரு நாள் பங்கமடையக் கூடியவைகளேயாம். இந்த பகவத்ஸேது அத்தகைத்தன்று. "ஏஷ ஸேதுः" என்கிற நிர்தேசம் உபநிஷத்வாக்யத்திற்கு ஸ்மாரகமாகும். [பாரம் கமயிதும் ஈஷ்டே] ஸம்ஸாராத் உத்தரிப்பிக்க வல்லதென்கை.

45. (யதோக்த-3.) உலகத்தில் நதிகளுக்குக் கட்டப்படும் ஸேது அலையெறிந்து ஓடும் நீர்ப்பெருக்கைத் தடுத்து நிற்கும். கடலலைகளைத் தடுக்கும்படியான ஸேது உலகில் கட்டப்படுவதில்லை. வேகா ஸேதுவென்னும் இந்த பகவத் ஸேதுவானது அத்யந்த விலக்ஷணமாயமைந்தது. வேகவதீ நதியினிடையிலே காணப்படுவது ஒரு விசேஷம். இங்கே கடல் ஏது? என்னில் ; [ப்ரஜாநாம் ஸம்ஸார ஜலதி கல்லோலாந்] * ஸம்ஸாரஸாகரம் கோரம் * என்றும் * பிறவிக் கடலுள் நின்று நான் துளங்க * என்றும் சொல்லுகிறபடியே நாம் துளங்குகிற ஸம்ஸாரஸாகரத்தின் அலைகளுண்டு தாபத்ரயாத்மகங்களான பலவகைப்பட்ட க்லேசங்கள்; அவை எப்படிப்பட்டவை யென்னில்; [ப்ரதிதாந்] ஸுப்ரஸித்தங்களென்று ஒரு பொருள்; பெருப்பெருத்தவை யென்று மற்றுெரு பொருள். ஆக இவற்றை ப்ரசமநம் செய்துகொண்டு விளங்குகிறுரென்றதாயிற்று.

46. (யதோக்த-4.) புராணக்கதையை அனைவருமறியச் சுருங்கப்பேசுகிறாரிதில். முன்பு நான்முகக் கடவுள் திருமாலைக் காணவேண்டித் தவங்கள் புரிந்தனன். ஆயினும் எம்பெருமானுடைய திருவடித் தாமரைகளில் நிலைகொள்ளாமல் வெவ்வேறு விஷய இன்பங்களில் பதறியோடுகின்ற தனது நெஞ்சை அடக்கியாளமுடியாமல் வருத்தங் கொண்டு இன்னது செய்வதென்று தெளியப்பெறாமல் திகைத்திருக்குமளவில் ஆகாயத்தில் நின்றும் ஒரு அசரீரி வாக்குத் தோன்றியது; அதாவது:—'பிரம! ஆயிரம் அச்வமேதங்களை அனுட்டித்தால்தான் சித்தசுத்தி பெற்றுத் திருமாலைக் கட் கூடாகக் காணப்பெறுவாய்; விரைவில் 'திருமாலைக் காணவேண்டி ஆயிரம் அச்வ மேதயாகமனுட்டிக்கும் தாமதத்தைப் பொறுக்ககில்லாயாகில், தொண்டை நாட்டி லுள்ள ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திற்குச் சென்று அவ்விடத்தில் அயமேத வேள்வியியற்றி எம்பெருமானை உகப்பிப்பாயாக: அங்கு ஒரு கருமம் செய்தாலும் அஃது ஆயிரமுக மாகிப் பயன் பெறுவிக்கும்; இஃது அந்த க்ஷேத்திரத்திற்கு உற்ற பெருமை' என்று. அதுகேட்டுப் பரமானந்தமடைந்த பிரமன் மேருமலையுச்சியில் நின்று உடனே எழுந்து ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர்ந்து அங்குத் தவமுனிவர் சூழ்ந்த திருவனந்த ஸரஸ்ஸையும் அதனருகில் திகழும் திருவத்திமாமலையையும் நோக்கி யுவந்து அத்திருக்குளக்கரையிலேயே தூயவேள்வி புரியத் துணிந்து ஸகல ஸன்னு ஹங்களும் செய்தவளவிலே, புரோஹிதரான ப்ருஹஸ்பதியானவர் 'திசைமுகனே! உனது தருமபத்தினியான ஸரஸ்வதியின்றி வேள்வியை நடத்த இயலாதாதலால் அவளை வரவழைக்கவேணும்' என்று சொல்ல, பிரபலமானவொரு மனவருத்தத்தி னால் நெடுநாளாகப் பிரிந்திருக்கின்ற அவளை எவ்விதமான உபாயத்தினாலும் வர வழைக்க முடியாமற்போக, அவளை உபேக்ஷித்து ஸாவித்ரி முதலிய மற்றை மனைவி யரை உடன்கொண்டு வேள்வியைத் தொடங்கினவளவிலே, அசுரர்களின் துர்ப் போதனையினால் மிக்க சீற்றங்கொண்ட ஸரஸ்வதி கணவனது வேள்வியைக் கெடுக்க முயன்று வேகவதியென்னும் நதியாகப் பெருகி மிகவும் பயங்கரமான விசையுடனே ஸத்யவ்ரத க்ஷேத்திரத்திற்கு வந்து சேர, யாகசாலையிலுள்ளாரனைவரும் அப்பெரு வெள்ளத்தைக் கண்டு திடுக்கிட்டு நிற்க, பிரமன் தனது யோக த்ருஷ்டியினாலே 'அசுரர்களால் கலக்குண்ட ஸரஸ்வதியின் செயல் இது' என்றுணர்ந்து உள்ளெலா முருகிக் குரல்தழுத்து உடம்பெலாம் கண்ணநீர் சோர நின்று பகவானை வாயாரத் துதிக்க, "அணியாக வேகவதி அலையோடு கொண்டாடியாலிக்க அணையாக் கிடந்த பெருமாள்" என்று பின்னுளர் போற்றுமாறு அந்த வெள்ளத்தைத் தடை செய்ய வல்ல அணையாகப் பள்ளிகொள்ள, அந்த சயனத் திருக்கோலத்தைக் கண்ட ஸரஸ் வதி நாணமுற்று மேலே பெருகிச் செல்லமாட்டாமல் திகைத்துநின்று அந்தர்வாஹி நியாய்ச் சென்று கடல் சேரலுற்றாளென்னு மிதிஹாஸம் இங்கு உணர்க.

47. (யதோக்த 6.) உத்தரார்த்தத்தில் திருமழிசைப்பிரானுடைய இதிஹா ஸத்தை அநுஸந்திக்கிறார். திருமழிசைப்பிரானுக்காக இப்பெருமான் போவதும் வரு வதுமாயிருந்தானென்கிற சரிதையை அநுஸந்தித்தவாறே அஸ்மதாதிகளின் ஸம் ஸாரகாந்தார கதாகதங்கள் தொலையுமென்கிறார். யாதவாப்யுதயத்திலே "பத்தம் ததா பாவயதாம் முகுந்தம் அயத்நவிச்சேதிநி கர்மபந்தே" என்றருளிச்செய்த ச்லோ கம் இங்கு ஒருவாறு நினைக்கத்தகும். வெண்ணெய் களவுகண்ட கண்ணபிரான் உர லிலே கட்டுண்டு கிடந்தானென்று சிந்தனை செய்தவாறே நம்முடைய கருமபந்தங் களெல்லாம் கட்டவிழ்ந்து தொலையுமென்றது அங்கு.

48. (யதோக்த) ஸ்ரீ ஹஸ்தி சைலசிகரோஜ்ஜ்வல பாரிஜாதமான தேவப் பெரு மாளுக்கு வரந்தரும் பெருமாளென்கிற திருநாமமும் அத்திருநாமத்திற்கீடான வர மளிக்கும் பெருமையும் யதோக்தகாரி யெம்பெருமானுடைய ஸந்நிதான விசேஷ த்தினால்தான் வாய்த்ததென்று ஸ்வாநுபவத்தைக் கொண்டு அருளிச்செய்கிறாரிதில்.

இவர் முன்னே திருவவதரித்தருளாவிடில் தேவப்பெருமாள் அவதரிக்கவே ப்ரஸக்தி யில்லையாகுமென்பது தத்துவமாதலால் இவ்வுண்மையை இங்ஙனே வெளியிட்டவாறு.

49. (அஷ்டபுஜாஷ்டகாநுபவம் சிறிதுசெய்வோம்.) கீழே துதித்த ஸ்ரீயதோக்தகாரியின் ஸந்நிதிக்குத் தென்புறத்திலேதிகழ்கின்ற அஷ்டபுஜ திவ்ய தேசத்தெம் பெருமானை ஓர் அஷ்டகமிட்டுத் துதிக்கிறாராசிரியர். இத்தலத்தி லீடுபட்ட பேயாழ்வார் * தொட்ட படையெட்டுந் தோலாத வென்றியான் அட்டபுயகரத்தான் அந்நான்று,குட்டத்துக்,கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்,தாள்முதலே நங்கட்குச் சார்வு.* என்று இப்பெருமானை ஸ்ரீகஜேந்த்ர ரக்ஷகனாக அநுஸந்தித்துப் பேசுகையாலே அவ்வபதாநத்தையே இந்த ஸ்துதிக்கு உயிராகவைத்து "கஜேந்த்ர ரக்ஷாத்வரிதம்" என்று உபக்ரமித்தருளுகிறார்.

50. (அஷ்டபு. 2) [அஷ்டபுஜாஸ்பதேச!] அஷ்டபுஜ! என்று விளிக்கலாமாயிருக்க இங்ஙனே விளிப்பது எதற்காக? அஷ்டபுஜனுடைய ஆஸ்பதத்திற்கு ஈசனே! என்று ஏதுக்குச் சொல்லவேண்டும்? என்று விசிகித்ஸை பிறக்கும். திருமங்கையாழ்வாருடைய அநுபவத்தை இங்கு உணர்த்தித் தெளிவு பிறப்பிக்கக் கடவோம். பெரிய திருமொழியில் (2-8.) * திரிபுர மூன்றெரித்தானும் * என்கிற திருமொழியினல் திருமங்கையாழ்வார் இத்தலத்தை யநுபவித்தாரென்பது ப்ரஸித்தம். இதற்கு முந்தின திருமொழியில் ஆழ்வார் தாமான தன்மையை இழந்து தாய்வாக்காலே பேசும்படி அடைந்த க்லேசங்களைத் திருவுள்ளம் பற்றின எம்பெருமான் 'இவ்வாழ்வாரை இப்படியோ நாம் துடிக்கவிட்டோம்! தம் துடிப்பைத் தாமே முறையிட்டுக் கொள்ளும்படியாகவும் நாம் பிற்பட்டோமே!'' என்று முடிமேல் மோதிக்கொண்டு, அடியார்களுக்குத் தான் உதவின குணங்களையும் பரம விலக்ஷணமான வடிவழகையும் பிரகாசப்படுத்திக் கொண்டு கக்சிப்பதியொன்றிலே * செம்பொனிலங்கு வலங்கைவாளி திண்சிலை தண்டொடு சங்கமொள்வாள் உம்பரிருசுடராழியோடு கேடகமொண்மலர்பற்றி அஷ்டபுஜனாய்ப் பரமபோக்யனாக ஆழ்வார்க்கு ஸேவைஸாதித்தான். ஆழ்வாரும் கீழ்த்திருமொழியின் அநுபந்தமாகவே பரகால நாயகியான நிலைமையிலேயே நின்று அப்பெருமானை ஸேவித்தார். எற்றைக்கும் எங்குங் கண்டறியாத திருக்கோலமாயிருந்தது. * ஆழியொடும் பொன்னார் சார்ங்கமுடைய வடிகளை இன்னாரென்றறியேன் * என்றாற்போலே அப்பெருமானை இன்னாரென்று அறியமாட்டிற்றிலர். அறிந்து கொள்ளாமலிருக்கவும் மனமில்லை. ஸ்வபுத்தியாலே அறிந்துகொள்ளவும் முடியவில்லை. என்னசெய்வது! நீர் ஆர்? என்று கேட்கலாமென்று பார்த்தாலோ வாய் எழும்பவில்லை. முகத்தை நேரே பார்த்து வார்த்தை சொல்லமுடியாதபடி சோதிவெள்ளம் அலையெறிந்து தள்ளுகின்றது; அதனால் முகம் நோக்கி நீர் யார்? என்று கேட்கமாட்டிற்றிலர். 'இவர் நம்முடைய பர்த்தாவாகவே யிருக்கக்கூடும்' என்று நெஞ்சிலே ஒரு தோற்றமும் தோன்றினமையால் வெட்கத்தாலும் 'நீர் ஆர்?' என்று கேட்கமாட்டிற்றிலர். கேட்டுத் தெரிந்துகொள்ள விருப்பமோ அதிகரித்துவிட்டது. அவர்தம்மையே நேரே முகம்பார்த்துக் கேளாமல் வேறொருவரை நோக்கி 'இப் பெரியவர் யாவர்?' என்று கேட்க, அதற்கு எம்பெருமான் தானே "நான் அட்டபுயகரத்தேன்" என்று மறுமொழி கூற, படுக்கைத் தலையிலே இப்படிச் சில வார்த்தைகள் நடந்துகொண்டிருப்பதைப் பரகால நாயகியின் தாய்மார் தோழிமார் முதலானார் செவியுற்று "நங்காய்! ஏதேனும் பிரமித்தாயோ? இவை என்ன வார்த்தைகள்?' என்று கேட்க; 'பிரமித்தேனல்லேன்; ஒரு மஹாபுருஷரை ஸேவிக்கப்பெற்றேன்; அவரை நேராக வினவமாட்டாமல் வேறொருவரை நோக்கிக் கேட்கும் பாவனையாக 'இவரார்கொல்?' என்று கேட்டேன்; அஷ்டபுஜப்பெருமாள் 'நான் தான் அட்டபுயகரத்தேன்' என்று விடை கூறுகிறார் காண்

மின்' என்று பரகாலநாயகி தன் தாய்மார்க்கும் தோழிமார்க்கும் நடந்த செய்தியைச் சொல்லுவதாக அமைக்கப்பட்டது அத்திருமொழி. இங்கே விமர்சிக்க வேண்டுவதொன்றுண்டு; 'இவராார்கொல்? என்றதற்கு விடை தருகின்ற எம்பெருமான் 'நான் அஷ்டபுஜன்' என்ன வேண்டியிருக்க, 'அட்டபுயகரத்தேன்' என்றது ஏன்? என்று. இதற்குக் கேண்மின். 'நான் அட்டபுயன்' என்று சொல்லிக்கொண்டால் தன்னை எம்பெருமானாகத் தானே வெளியிட்டதாய் விளங்கிவிடும். அப்படி ஸ்பஷ்டமாகச் சொல்லிக்கொள்ள எம்பெருமானுக்குத் திருவுள்ளமில்லை. வேற்று மனிதனாகப் பொய் சொல்லிக்கொள்ளவும் விருப்பமில்லை; ஆகவே வெகு சாதுரியமாகச் சொன்ன விடை 'அட்டபுயகரத்தேன்' என்பது. 'அஷ்டபுஜ க்ஷேத்திரத்திற்கு நான் அதிபதி' என்றதாகவுமாம்; 'அஷ்டபுஜ க்ஷேத்திரத்திலே கிடப்பானொருவன் நான்' என்று ஸாமான்யமாகச் சொல்லிக் கொண்டதாகவுமாம்.

51. துஷ்யந்தமஹாராஜன் வேட்டையாடிக்கொண்டே சகுந்தலை யாச்ரமத்தை யடைந்தபோது இவனை இன்னானென்று தெரிந்துகொள்ள விரும்பி நீ யார்? என்று கேட்டார்க்கு அரசன் விடை கூறும்போது " பவதி ய: பௌரவேண ராஜ்ஞா தர்மாதிகாரே நியுக்த: ஸோஹம் " [புருவம்சத்துப்ரபுவினாலே தரும காரியங்களைச் செய்யுமாறு நியமிக்கப்பட்டவன் யான்] என்று சாதுரியமாக விடை கூறினது இதற்கு உவமையாகும். புருவம்சத்து அரசனாகிய தன் தந்தையினால் நியமிக்கப்பட்ட அரசன் தான்- என்றும், புருவம்சத்து ராஜாவுக்கு வேலைக்காரன் தான் என்றும் இருவகையாகப் பொருள்படுமாறு உரைத்தபடி. அஷ்டபுஜாஸ்பதேச ! என்றவிதுவும் அந்தச் சாயையிலே யருளிச்செய்ததாம். " அஷ்டபுஜாகிலேச !" என்ற சிலருடைய பாடம் ஸர்வாத்மநா விரஸமென்று தவிர்க்க. சிலர் (அஷ்டபுஜாஸ்பதேச) என்றே பாடங்கொண்டும் பொருளின் மருமமுணராமல் " எட்டு புஜங்களுக்கு இருப்பிடமான ஈசனே" என்றுரைப்பர்; அதுவும் அஸம்பத்தம். மற்றுஞ்சிலர் (அஷ்டபுஜாப தேச!) என்று பாடங் கூறுவர்; அஷ்டபுஜனென்று வ்யபதேச முடையவனே! என்று பொருள் கூறிவிடலாமாயினும் பாடம் ஆசிரியருகந்ததன்று. 'அட்டபுயகரத்தான்' என்கிற ஆழ்வாரருளிச் செயலுக்குச் சேர்ந்த பாடம் (அஷ்டபுஜாஸ்பதேச!) என்பதேயாம் என்று தெளிக.

52. (அஷ்டபு. 3.) * ஸ்வரூப ரூபாஸ்த்ர * இத்யாதி. இந்த ச்லோகத்தின் கருத்தை அநுபவரஸிகர்களே உய்த்துணரவல்லவர்கள். அஷ்டபுஜனாய் நின்ற நிலையிலே பரத்வ ஸௌலப்யங்களிரண்டும் பொலிய நின்றாலும் பரத்வத்திற்காட்டிலும் ஸௌலப்யமே விஞ்சியிருக்கும்படியைத் திருவுள்ளம்பற்றி அதற்கொரு ஹேது விசேஷத்தை உல்லேகிக்கிறாரிதில். ஸ்வரூபமோ பரத்வமே வடிவெடுத்தது. திவ்ய மங்கள விக்ரஹமோ "ரூப மேவாஸ்ய ஏதந்மஹிமாநம் வ்யாசஷ்டே" என்கிற கணக்கிலே பரத்வத்தைக் கோட்சொல்லித் தருகின்றது. * செம்பொனிலங்கு வலங்கைவாளி திண்சிலை தண்டொடு சங்க மொள்வாள், உம்ப ரிருசுட ராழியோடு கேடக மொண்மலர் * என்னப்பட்ட அஷ்ட திவ்யாயுதங்களும், * கிரீட மகுட சூடாவதம்ஸ மகர குண்டல க்ரைவேயக ஹார கேயூர கடக ஸ்ரீவத்ஸ கௌஸ்துப முக்தாதாம உதரபந்தந பீதாம்பர காஞ்சீகுண நூபுராத்யபரிமித திவ்யபூஷணங்களும் "வக்ஷஸ் ஸ்தல்யாம் துலஸி கமலா கௌஸ்துபைர் வைஜயந்தீ ஸர்வேசத்வம் கதயிதராம் ரங்கதாம்நஃ" என்று பட்டரருளிச் செய்தபடியே பரத்வ பிசுநங்களாயிரா நின்றன. ஆக இவற்றையடைய ஸேவிக்கும்போது 'இவன் பராத்பரனல்லனோ? இவனை நாமோ அணுகுவது!' என்று கூசவேண்டியிருக்கும். அங்ஙன் கூசினவர்கள் *வளவேழுலகு தலையெடுத்துப் பிற்காலிக்க வேண்டியதாயுமிருக்கும். அங்ஙனே ஆகாமைக்காக ஸௌசீல்யாதி குணங்களைக் காட்டி யீடுபடுத்திக் கொள்ளுவது எம்பெரு

மானுடைய இயல்பு. அவ்வெளிமைக் குணங்களை ஏக காலத்திலேயே முற்றும் காட்டி விட்டால் பரத்துவத்தை யநுபவிக்கப் பாங்கில்லையாகும். பரத்துவத்தை மட்டும் காட்டிப்போந்தால் அதையநுபவிக்க அதிகாரிகளில்லை; சீலாதிகளான எளிமைக் குணங்கள் காட்டிலெரித்த நிலாவாகி யொழியும். எம்பெருமான் பரம சதுரனுகை யாலே ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவிப்பிக்க வேண்டி 'இவன் பராத் பரனல்லனோ!' என்கிற சிந்தையே விளையாதபடிக்கு ஸௌசீல்ய ஸௌலப்யாதிகளான எளிமைக் குணங்களை க்ரமேண காட்டியருளும்படியைக் கூறினாராயிற்று.[போகே ம்ருதுஉபக்ரமதாம் அபிப்ஸந்] பரத்வத்தை ப்ரகாசிக்க வொட்டாமல் சீலாதிகளாலே மறைப்பதற்குக் காரணம் சொல்லுகிறது. முந்துற முன்னம் பரத்வத்தை யநுபவிக்கப்புக்கால் பெரு வெள்ளத்திலே அமிழ்ந்து போம்படியாமத்தனை. இது மிக வியக்கத்தக்க உல்லேகம்.

53.(அஷ்டபு.5)* அபீதிஹேதோரித்யாதி. *களைவாய் துன்பம் களையாதொழி வாய் களைகண் மற்றிலேன்* என்கிற பாசுரத்தை யுட்கொண்டு அருளிச் செய்யும் சுலோகமிது, அபீதிஸ்தவத்தின் தொடக்கத்தில் "அபீதிரிஹ யஜ்ஜுஷாம் யதவ தீரிதாநாம் பயம் பயாபயவிதாயிநோ ஜகதி யந்நிதேசே ஸ்திதாঃ" என்றருளிச் செய்த ச்லோகம் இங்கு அநுஸந்தேயம். ஸம்ஸாரபயம் முதலானவற்றைப் போக்க வேணுமானல் தேவரீர் போக்கலாகுமே யொழிய அல்லாதார் போக்க அவகாசமேது? அவர்கள் தங்களுக்கு நேரும் பயத்தையே தாங்கள் போக்கிக் கொள்ளமாட்டாமல் தேவரீரைத் தஞ்சமாகப்பற்றி நிற்கும்போது, எங்கள் பய த்தைப் போக்க ப்ரஸக்திதானுண்டோ? என்கை. தேவரீரைப்பற்றி "நின்னருளே புரிந்திருந்தேன்" என்றிருக்கு மெங்களுக்கு பயந்தானுண்டாகவும் மாட்டாது. தேவ ரீர் யார் பக்கலில் சீறியருளுகிறதோ அவர்கள் வேறு யாரிடத்திலும் ரக்ஷை பெற முடியாதென்கிறார். "ப்ரஹ்மா ஸ்வயம்பூச் சதுராநநோ வா.......... த்ராதும் ந சக்தா யுதி ராமவத்யம்" என்ற திருவடிவாக்கை நினைப்பது!

54. (அஷ்டபு.7.) *ஸமாதிபங்கேஷ்வபி* இத்யாதி. சாஸ்த்ரங்களிலே பக்தி யோகாதிகள் மத்ப்ராப்தி ஸாதநமாகச் சொல்லியிருக்கையாலே ஜ்ஞாந சக்திவை கல்ய மில்லாதவரான நீர் அவற்றிலே யிழிந்து அவ்வழியாலே என்னைப் பெறலாகா தோவென்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றினனுக, ஆசிரியர் அதற்கு விண்ணப் பஞ் செய்கிறாரிதில்.ஸ்வப்ரவ்ருத்திகள் ஸர்வாத்மநா ஸாபாயங்களாகையாலே அவற் றுக்கு இடையூறுகள் விளைந்தே தீரும். *பதநாந்தாஸ் ஸமுச்ச்ரயாঃ* என்கிற கணக் கிலே ஆரூட பதிதனுகை ப்ராப்தமாகக் கூடும். ஸித்தோபாய பூதரான தேவரீரை வரித்து "நிர்ப்பரோ நிர்ப்பயோஸ்மி" என்றிருக்கக் கடவனுன அடியேன் ஒருகால் பக்தி யோகத்தில் ஆரோஹண நிலையையும் அடுத்தபடி பாப ப்ராசுர்யத்தாலே கீழ்விழும் நிலைமையையும் ஸஹிக்ககில்லேன். தேவரீர்கை பார்த்திருக்குமதுக்கு மேற் பட க்ஷேமமில்லை யென்று கொண்டேன் என்றாராயிற்று.

55. காமாஸிகாஷ்டகத்தைச் சிறிது அநுபவிப்போம். "மன்னுமதிட்கச்சி வேளுக்கையாளரியை" என்று பெரிய திருமடலில் திருமங்கையாழ்வாரும், மூன்றுந் திருவந்தாதியில் * சிறந்தவென்சிந்தையும்* அன்றிவ்வுலகம் *விண்ணகரம் வெஃகா* என்கிற பாசுரங்களில் பேயாழ்வாரும் மங்களா சாஸனம் செய்தருளின திருப்பதி வேளுக்கையென்பது. இத்தலத்தெம்பெருமான் ந்ருஸிம்ஹரூபியாக ஸேவைஸாதித் தருள்வதனுல் 'சிங்கப்பெருமாள் கோயில்' என்றும் வழங்கப்பெறுமித்தலம். வேள் இருக்கை' என்கிற இரண்டு சொற்கள் சேர்ந்து வேளுக்கையென மருவிற்று. வேள் என்று ஆசைக்குப் பெயர்; ஆசையோடு எழுந்தருளியிருக்குமிடமென்றவாறு. காமாஸிகா என்ற வடமொழி நாமத்தின் பொருளுமிதுவேயாகும். காமேந ஆஸிகா -

காமாஸிகா. இதில் முதல் சுலோகத்திலேயே "காமாத் அதிவஸந்" என்று இப்பொருள் விவரிக்கப்பட்டதாயிற்று. இப்பொருளிலேயே 'மதநாஸிகா' என்றுமருளிச் செய்கிறார். காமசப்தமும் மதநசப்தமும் பர்யாயமிறே. ஒவ்வோரெம்பெருமானுக்கும் எட்டெட்டாகவே ஸ்துதிகளையிட்டருள்வது "இனமலரெட்டுமிட்டு" என்றும் *கந்தமாமலரெட்டுமிட்டு* என்றும் திருமங்கையாழ்வாரருளிச்செய்த கணக்கிலே அஷ்டவித புஷ்பங்களையிடுவதோடொக்கும். "அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரிய நிக்ரஹ:, ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமா புஷ்பம்விசேஷத:, ஜ்ஞாநம் புஷ்பம் தப: புஷ்பம் த்யானம் புஷ்பம் ததைவ ச; ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ ப்ரீதிகரம் பவேத்" என்று அஷ்டவித புஷ்ப விவரணம் காண்க. ஆண்டாள் பாமாலை வேறாகவும் பூமாலை வேறாகவும் ஸமர்ப்பித்தாள்; அங்ஙனன்றியே நம் ஆசிரியர்: பாமாலையையே பூமாலையாக ஸமர்ப்பிக்கிறார் போலும்.

56. (காமாஸிகா-7.) "அங்கண்ஞாலமஞ்ச அங்கோராளரியாய்" என்றும் "எரிந்தபைங்கணிலங்கு பேழ்வாய் எயிற்றொடு இதெவ்வுருவென்று இரிந்து வானோர் கலங்கியோட விருந்தவம்மான்" என்றும் சொல்லுகிறபடியே மஹா பயங்கரரூபியாக ஆளரி அவதரித்தாலும் "ஸ்மேராநநாக்ஷி கமலைர் நமத: புநாநாந் தம்ஷ்ட்ராகதாப்ருகுடிபிர் த்விஷதோ துநாநாந்" என்ற கணக்கிலே ப்ரதிகூலர்க்கு அணுகவொண்ணாததாயும் அநுகூலர்க்கு ஸௌம்யமாயுமிறேயிருப்பது திருமுக மண்டலம். அதுதன்னை யநுபவிக்கிறாரிதில். வக்த்ரே என்கிற விசேஷ்யத்திற்கு நான்கு விசேஷணங்கள் இடப்பட்டன. ஸடாபடலங்களினால் பயங்கரமாயும்ஸிம்ஹ கர்ஜனையினால் உத்படமாயு மிருக்குமிருப்புக்கு மேலே சீற்றத்தையும் புருவநெறிப்பையும் ஏறிட்டுக்கொண்டதனால் ஆஸுரப்ரக்ருதிகளுக்கு அணுகவொண்ணாத நிலை சொல்லிற்றாயிற்று. இந்த நிலைமையிலும் * பள்ளியிலோதிவந்த சிறுக்கன்மேல் திருவருள் வெள்ளம் குறையற்றிருக்குமிருப்பு உத்தரார்த்தத்தில் பேசப்படுகிறது. [தநுஜடிம்பதத்தஸ்தநா க்ருபா] க்ருபையானது ப்ரஹ்லாதாழ்வானுக்கு ஸதந்யபானம் செய்விக்கிறதாக இங்குச் சொன்னது—அவனை அஞ்சக் கொடாதே போஷிக்கின்றதென்னும் தாத்பர்யத்திலேயாம். திருவாய்மொழியில் (3—6—5) * சீற்றத்தோடு அருள் பெற்றவனடிக் கீழ்ப் புகநின்ற செங்கண்மால்* என்றவிடத்து ஈடுமுப்பத் தாறாயிரப்படியில்—"ஹிரண்யன்பக்கல் சீற்றம் செல்லாநிற்க ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குக் கிட்டலாயிருந்தபடி எங்ஙனே? யென்று எம்பெருமானாரைச் சிலர் கேட்க, ஸிம்ஹம் ஆனைமேலே சீறினாலும் குட்டிக்கு முலையுண்ணலாம்படியிருக்குமிறே என்று அருளிச்செய்தார். ஆச்ரித வாத்ஸல்யத்தாலே அவர்கள் விரோதிகள்மேலே சீறின சீற்றமானால் பின்னை அவர்களுக்கு அணையவொண்ணாதபடி யிருக்குமோ? என்றுமருளிச் செய்தார்" என்றுள்ள ஸம்வாதம் இங்கே அநுஸந்தேயம். எம்பெருமானாருளிச் செய்தவிது "இழவு தரியாததோரீற்றுப்பிடி யிளஞ்சீயம் தொடர்ந்து முடுகுதலும் குழவியிடைக் காலிட்டெதிர்ந்துபொருங் கோவர்த்தனம்" என்கிற பெரியாழ்வார் திருமொழியை யுட்கொண்டேயாம். இவ்விடங்களில் முலையுண்ணக் கொடுத்தல் பேசப்பட்டிருப்பதை யுட்கொண்டே ஆசிரியர் இங்கு "தத்தஸ்தநா" என்றருளிச்செய்தாரென்றுணர்க.

57. (காமாஸி-8.) * த்வயி ரக்ஷதி. * ஈச்வரனையொழிந்தவர்கள் ரக்ஷகரல்லரென்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே நிரூபிதமாகையாலே அதுதன்னை ஸ்திரீகரித்தருளா நின்றுகொண்டு இந்த ச்லோகமருளிச் செய்கிறார். ஸர்வேச்வரன் கைவிடாது ரக்ஷித்தருளுமளவில் இதர ரக்ஷகர்களைத் தேடியலைய வேண்டா; அவன் ரக்ஷித்தருளத் திருவுள்ளம் பற்றாதே கைவிட்டானாகில் அப்போதும் ரக்ஷகாந்தராணும் அந்வேஷணம் விபலம் என்று திண்ணிய அத்யவஸாயம் கொண்டிருக்கும்படி

யைத் தெரிவித்தருளினாராயிற்று. அஷ்டபுஜாஷ்டகத்தில் (6) "த்வயி ப்ரவ்ருத்தே மம கிம் ப்ரயாஸை: த்வய்யப்ரவ்ருத்தே மம கிம் ப்ரயாஸைঃ" என்றருளிச் செய்ததும் இதுவும் பர்யாயமேயென்றுணர்க.

58. (சரணுகதிதீபிகாநுபவம் தொடங்கப்படுகிறது.) விளக்கொளி யெம் பெருமானென்று தென்மொழியிலும் தீபப்ரகாசனென்று வடமொழியிலும் வழங்கு மெம்பெருமா னெழுந்தருளியிருக்கும் திவ்யதேசம் திருத்தண்காவென்று ப்ரஸித்தி பெற்றிருக்கும். "என்னை யாளுடை யீசனை யெம்பிரான் தன்னை யாம் சென்று காண்டும் தண்காவிலே" என்று பெரிய திருமொழியிலும், "விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்" என்று திருநெடுந்தாண்டகத்திலும் திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திவ்யதேசமிது. இத்தலத்தின் பரிஸரத்திலேயே ஆசிரியர் தாமும் அவதரித்தருளினர். இத்தலத் தெம்பெருமானைத் துதிக்கத் திருவுள்ளம் பற்றின வாசிரியர் இந்த ஸ்துதிக்கு சரணுகதி தீபிகையென்று திருநாமமிட்டருளினர். சரணுகதி ரஹஸ்யார்த்த தத்துவங்களை இதில் வெளியிட்டருளத் திருவுள்ளம் பற்றியே இந்தத் திருநாமமிட்டருளினர்.

59. சரணுகதிக்கு இன்னார் அதிகாரியென்பது, சரணுகதியின் ஸ்வரூபம் இத்தகைத் தென்பது,சரணுகதர்களின் மேன்மையிருக்கும்படி முதலான பல விஷயங்கள் எளியமுறையில் வெளியிடப்பட்டிருப்பது இதுதன்னிலேயாம். ந்யாஸ தசகம்,ந்யாஸ திலகம், ந்யாஸ விம்சதி என்னும் க்ரந்தங்களோ டொக்கப் பரிகணநீயமானது இது, சாஸ்த்ரார்த்தங்களை ஸ்தோத்ரத்திலே யேறிட்டு அருளிச்செய்யும் வழியை முதன் முதலாக ஆளவந்தார் காட்டியருளினார். ஸ்தோத்ரரத்நத்திற்கு அவதரித்திருக்கிற தனியனைக் கொண்டு அதனை யுணரலாம்; 'ஸ்வாதயந்நிஹ ஸர்வேஷாம் த்ரய்யந்தார்த்தம் ஸுதுர்க்ரஹம். ஸ்தோத்ரயாமாஸ யோகீந்த்ர:' என்றிறே அந்தத் தனியனிருப்பது. அவ்வண்ணமாகவே இந்த ஸ்துதிக்கும் ஒரு தனியன் அவதரித்திருக்க வேண்டும். அக்குறை தீர இந்த ஸ்துதியின் முதல் ச்லோகமே நன்கு அமைந்ததாயிற்று.

60. (சரணுகதிதீ-1.) "எதிவரனார் மடைப்பள்ளிவந்த மணமெங்கள் வார்த்தையுள் மன்னியதே" என்றும் "இதி யதிராஜமஹாநஸ பரிமள பரிவாஹ வாஸிதாம் பிபத" என்று மருளிச் செய்பவர் ஆசிரியர். எம்பெருமானார் பக்கலிலே பழுக்கக் கேட்ட கிடாம்பியாச்சான் மூலமாகக் கிடாம்பி யப்புள்ளாரளவும் வந்து தேங்கின அர்த்த விசேஷங்கள் இந்த சரணுகதி தீபிகையென்னும் ஸ்துதி நூல் வழியாக வெளிவருகின்றமை பாரீர் என்று விவக்ஷித்து "யதீச்வர மஹாநஸ ஸம்ப்ரதாயம் இஹ பச்யந்து" என்றருளிச் செய்தாராயிற்று. யதீச்வர மஹாநஸ ஸம்ப்ரதாயார்த்தம் அநேக விஷயகங்களாக இருந்தாலும் ப்ரக்ருதம் வெளிவருவது சரணுகதி விஷயகமென்று தெரிவிக்கவேண்டி "ப்ரபதந ப்ரவண மஹாந்த: பச்யந்து" என்றார். 'எம்பெருமானுக்கு இது வொரு ஸ்தோத்ர நூல்' என்று ஸாமாந்யமாக நினைக்கலாம்படி யிருந்தாலும், இது மற்ற ஸ்தோத்ரங்களைப் போன்றதன்றென்றும் சரணுகதி விசேஷார்த்தமே ஸ்துதியாக வடிவெடுத்ததென்றும் முதல் பாதத்தினால் வ்யஞ்ஜிதமாயிற்று. மூன்றாவது பாதத்தில் ஸ்வரூப ப்ராப்தமான நைச்யாநுஸந்தான முறைத்திருக்கும், சிறந்த அர்த்த விசேஷமானது நீசனேன் நிறையொன்றுமிலேன என்னுடைய வாக்கோடே கலசியிருந்தாலும் கெடுதலொன்று மடைந்ததில்லையென்கை. ப்ராமாணிகத்வமும் ப்ரபந்நஜந பரிக்ராஹ்யத்வமுமாகிற ஸ்வபாவம் குன்றாமையை அஜஹத் ஸ்வபாவம் என்பதனாலருளிச் செய்தபடி.

61. (சரணாகதிதீ-3.)*தீபஸ் த்வமேவ ஜக்தாம் தயிதா ருசிஸ் தே தீர்க்கம் தம:ப்ரதிநிவர்த்ய மிதம் யுவாப்யாம்.* ஸ்தவ்யம் ஸ்தவப்ரியதமம் சரணோக்தி வச்யம் ஸ்தோதும் பவந்தமிஹ வாஞ்சதி ஜந்துரேஷ :.* விளக்கொளியென்றும் தீபப்ரகாசனென்றுமுள்ள திருநாமம் எம்பெருமானொருவனுக்கே வழங்கப்பட்டு வந்தாலும் இது திவ்ய தம்பதிகளுக்கே ஏற்ற திருநாமமாகுமென்பதை மூதலியாநின்றுகொண்டு ஸ்துதியிலே தமக்குள்ள விருப்பத்தை விண்ணப்பஞ் செய்கிறாரிதில். " அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா " என்று பிராட்டியும், "அநந்யா ஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா " என்று பெருமாளும் தனித்தனியே பணித்தருளினபடியே எம்பெருமான் மணித்யுமணிதீபாதிரூப ப்ரபாவத் பதார்த்தமாயும், பிராட்டி தத்குண பூதமான ப்ரபா பதார்த்தமாயுமிருக்கை சாஸ்த்ரஸித்தம். "ஜயத்யாச்ரித ஸம்த்ராஸ த்வாந்த வித்வம்ஸநோதய:, ப்ரபாவாந் ஸீதயா தேவ்யா பரமவ்யோமபாஸ்கர:" என்று ஆசிரியர் தாமும் (ரகுவீர கத்யோபக்ரமே) இது தன்னை யருளிச் செய்தார். பட்டரும் ஸ்ரீகுணரத்ந கோசத்திலே " ஸ்வயா தீப்த்யா ரத்நம் பவதபி மஹார்க்கம் நவி குணம் ந குண்ட ஸ்வாதந்த்ர்யம் பவதி ச ந சாந்யாஹித குணம் " என்று அந்ய பரோக்தியினாலே இது தன்னை நிபந்தித்தார். ஆக விளக்கும் ஒளியும் சேர்ந்தே தமோநிரஸநக்ஷமமாகக் காண்கையாலே திவ்ய தம்பதிகளான நீங்களிருவரும் சேர்ந்து இவ்விருள்தருமா ஞாலத்தின் தன்மையைத் தொலைத்தருள லாகுமென்றார் பூர்வார்த்தத்தாலே. இத்தால் ஆசிரியர் தம்முடைய தமோ நிராஸத்தையும் ஸித்தவத்கரித்துக் கொண்டு அபஹததமஸ்கரான தாம் ஸ்துதிக்ருதிக்கு அர்ஹரென்னுமிடத்தை உத்தரார்த்தத்தாலே பேசுகிறாராயிற்று.

62. ஸஹஸ்ரநாமத்திலே " ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய:" என்றதை " ஸ்தவ்யம் ஸ்தவ ப்ரியம்" என்று அநுபாஷிக்கிறார். ஸ்தவ்யத்வமாவது ஸ்துதி யோக்யத்வம். "கொள்ளக் குறைவிலன்" (திருவாய்மொழி 3—9—5.) என்றவிடத்து ஈடுமுப்பத்தாறாயிரத்திலே " நீங்கள் யாவை யாவை சில ஏற்றங்களை யிட்டுக் கவி பாடினீகோள்,அவற்றை ஸ்வீகரிக்குமிடத்தில் ஒரு குறையுடையனல்லன்" என்றருளிச் செய்தது இங்கே அநுஸந்தேயம். இதன் கருத்து யாதெனில்; தலையில் மயிரில்லாதானொருத்தனைக் குழலழகனென்று பாடினால் அவன் வெள்கவேண்டியிருக்கும்; அறிவொன்று மில்லாதா னொருவனைக் கல்விக் கடலென்று பாடினால் அவன் அந்த ஸ்துதியைக் கொள்வதற்கு லஜ்ஜிக்க வேண்டியிருக்கும். எம்பெருமான் ஸமஸ்தகல்யாண குணாத்மகனாகையாலே யார் எங்ஙனே துதித்தாலும் அவ்விதமான ஸ்துதிகளைக் கொள்ளக் குறைவில்லாதானாயிருப்பன்; இதுவாயிற்று ஸ்தவ்யத்வம். இனி ஸ்தவ ப்ரியத்வமாவது—மக்களின் மழலைச் சொற்களைக் கேட்க ஆசைகொண்டிருக்கும் மாதா பிதாக்களைப்போலே நம்போல்வாருடைய அவத்யஜடிலமான துதிமொழிகளையும் கேட்கையிலே ருசியுடையனா யிருக்கையாம். ஸ்தவே ப்ரிய :- ஸ்தவ ப்ரிய :; ஸ்தவ: ப்ரிய: யஸ்யஸ:- ஸ்தவ ப்ரிய:, என்று தத்புருஷ பஹுவ்ரீஹிகளிரண்டுமாம்.

63. (அதிலேயே.) [சரணோக்திவச்யம்.] சரணாகதிதான் மாநஸிகம் வாசிகம் காயிகம் என்று மூன்று படிப்பட்டிருக்குமே. "ஜ்ஞாநாந் மோக்ஷமாகையாலே மாநஸமாகக் கடவது" என்று சாஸ்த்ரார்த்தமிருக்கச் செய்தேயும் மநஸ் ஸஹகாரமின்றிக்கே சரணமென்று உக்தி மாத்ரமுண்டானாலும் அவ்வளவுக்கே ஸர்வாத்மநா வசம்வதனா யிருப்ப னென்கை. "என்னூரைச் சொன்னாய், என்பேரைச் சொன்னாய், என்னடியாரை நோக்கினாய், அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக் கொதுங்க நிழலைக் கொடுத்தாய்" என்றாப்போலே மடிமாங்காயிட்டு விஷயீகரிக்கு மெம்பெருமான் சரணோக்தியைப் பெற்றானாகில் ஸர்வஸ்வமும் பெற்றானாய்க் களிப்பனாயிற்று. * மாதவனென்றதே கொண்டு * என்றும் * திருமாலிருஞ் சோலைமலை யென்றேன் என்னத் திருமால் வந்து என்னெஞ்சு நிறையப் புகுந்தான் * என்றுமுள்ள பாசுரங்

களை இங்கே யோஜிப்பது. 'அஹம் வாஞ்சாமி' என்ன வேண்டுமிடத்து 'ஏஷ ஜந்துர் வாஞ்சதி' 'ஏஷ ஜநோ வாஞ்சதி' என்ருப்போலே ப்ரதம புருஷனையிட்டுச் சொல்லுகை கவி ஸம்ப்ரதாயம்.

64. (சரணுகதி-5) ஸ்வாமிந்! கபீரஸூபகம் ச்ரமஹாரி பும்ஸாம் மாதுர்யரம்யமநகம் மணிபங்கத்ருச்யம், வேகாந்தரே விதநுதே ப்ரதிபிம்பசோபாம் லக்ஷ்மீஸ்ர: ஸரஸிஜாச்ரய மங்ககம் தே.* மிக விலக்ஷணமான சிலேடையில் இந்த சுலோகமமைந்தது. வேகவதியாற்றினுள்ளே பிராட்டியின் திருமேனியும் எம்பெருமான் திருமேனியும் பிரதிபலிக்கின்றது. இதை யுற்றுநோக்குமிடத்து, பிராட்டியின் திருமேனிதான் எம்பெருமான் திருமேனியாகத் தோன்றுகின்றதோ; அல்லது எம்பெருமான் திருமேனிதான் பிராட்டியின் திருமேனியாகத் தோன்றுகின்றதோ! என்று விதர்க்கிக்கலாம்படியுள்ளது. ஸ்த்ரீயான பிராட்டியின் உருவமும் புமானுன எம்பெருமானுடைய உருவமும் இந்த விதர்க்கத்தை எங்ஙனே ஸஹிக்குமென்று சங்கை தோன்றக்கூடும். விசேஷண ஸாம்யத்தையிட்டு அந்த வாசி தோன்ருதபடி செய்திருப்பது விலக்ஷண கவிதாசாதுர்யம்.

65. பிராட்டி ஒரு தடாகமாக ரூபணம் செய்யப்பட்டாள்; அத் தடாகமும், *தாமரை நீள்வாசத்தடம் போல் வருவானே* என்றும் *தயரதன் பெற்ற மரதக மணித்தடம்* என்றும் தடமாகச் சொல்லப்பட்ட எம்பெருமானும் விசேஷணங்களினுல் ஒற்றுமை பெறுவிக்கப்படுகிற அழகைக் காண்மின். பிராட்டியை ஒரு தடாகமாக ரூபித்தபடியாலே தடாகத்திற்கும் பிராட்டிக்கும் ஸ்வபாவ ஸாம்யத்தை முன்னம் கிரஹிக்கவேணும்; இவ்விரண்டுக்கும் எம்பெருமானுக்கும் ஸ்வபாவ ஸாம்யத்தை உடனே க்ரஹிக்கவேணும். ஆக மூன்று விசேஷ்யங்களுக்கு [தடாகம், பிராட்டி, எம்பெருமான்களுக்கு]ப் பொருந்தக்கூடிய விசேஷணங்களின் பொருட்சுவையை இனியநுபவிப்பது.

66. தடாகம் ஸாமாந்யமானதன்று; அஃது எப்படியிருக்குமென்ருல், [கபீரஸூபகம்] ஆழமுள்ளதும் அழகுள்ளதுமாயிருக்கும். [பும்ஸாம் ச்ரமஹாரி] தன்னிலே அவகாஹித்தவர்களின் சிரமத்தை யெல்லாம் போக்கும். [மாதுர்ய ரம்யம்] இனிப்பான தீர்த்தமுடையதாயிருக்கும். (அநகம்) அழுக்கு முதலிய கல்மஷமற்றிருக்கும். (மணிபங்கத்ருச்யம்)''பங்கஸ் தரங்க ஊர்மிர்வா'' என்கிற அமரகோசத்தின்படி பங்கமென்று அலைக்குப் பெயர். மணிகொழிக்கு மலைகள் மோதப்பெற்றிருக்குமென்கை. (ஸரஸிஜ ஆச்ரயம்) தாமரைகளுக்கு இருப்பிடமுமாயிருக்கும். இனி பிராட்டி பக்ஷத்தில், (கபீரஸூபகம்) கம்பீரத்தன்மையும் ஸௌபாக்யமும் பொருந்தியவள். (பும்ஸாம் ச்ரமஹாரி] தன்னை யடிபணிந்தவர்களின் சிரமங்களை யெல்லாம் புருஷகாரக்ருத்யத்தினுல் போக்குமவள். [மாதுர்ய ரம்யம்) எம்பெருமானை வசீகரிக்கவல்ல வாங்மாதுர்யத்தையுடையவள். [அநகம்] சிலரை யநுக்ரஹிப்பதும் சிலரை நிக்ரஹிப்பதுமான குற்றமற்றிருப்பவள், [மணிபங்கத்ருச்யம்] அநேக திவ்யபூஷண பூஷிதையாயிருக்கையாலே ரத்ன சகலங்கள் விளங்கப் பெற்றிருப்பவள். [ஸரஸிஜஆச்ரயம்] ''பத்மப்ரியே பத்மிநி பத்மஹஸ்தே பத்மாலயே பத்மதளாயதாக்ஷி'' என்கிறபடியே பத்மஸம்பந்தம் மிக்கிருப்பவள்.

67. இனி எம்பெருமான் பக்ஷத்தில், [கபீரஸூபகம்] காம்பீர்ய ஸௌந்தர்யங்களில் குறையற்றவன். (பும்ஸாம் ச்ரமஹாரி) *நினைந்திருந்தே சிரமம் தீர்ந்தேன்* என்கிறபடியே சிந்தித்தவளவிலேயே சிரமங்களைப் போக்குமவன். (மாதுர்ய ரம்யம்) ''ம்ருதுர் தயாளுர் மதுரஸ் ஸ்திரஸ் ஸம:'' என்று ஆளவந்தாரருளிச் செய்தபடியே தேனும் பாலும் நெய்யும் கன்னலுமமுதுமொத்து அக்காரக்கனியாயிருப்பவன். (அநகம்) அகில ஹேயப்ரத்யநீகன். (மணிபங்கத்ருச்யம்) ''மணிவிடம்பிநி தஸ்ய மநோஹரே வபுஷி'' என்னும்படியிருக்கும் திருமேனி. (ஸரஸிஜா ஆச்ரயம்) ஸரஸிஜாயா:—கமலாயா: ஆச்ரயபூதனுயிருப்பவன். ஆக இத்தகைய ஸ்வபாவ ஸாம்யங்

களாலே பிராட்டியாகிற ஸரஸ்ஸிலே எம்பெருமான் பிரதிபலிப்பதாகவும், திவ்ய தம்பதிக ளிருவரும் வேகவதீ ஸரித்ஸலிலத்திலே பிரதிபலிப்பதாகவும் வைத்து இங்ஙனே விலக்ஷண பாவனை பொலியப் பேசினவிது அத்புதவாக் சமத்காரம்.

68. (அதிலேயே-11.) நிலாத்தென்றல் சந்தனம் குஸுமம் முதலான அசேத னப் பொருள்கள் தனக்கென்று ஒரு போகமின்றிக்கே பிறருடைய போகத்திற்கே எப்படி உறுப்பாகின்றனவோ, அப்படியே சேதநனும் தன்னிடத்தில் போக்த்ருத்வ மிருப்பதாக நினையாதே அசேதநத்திற்குப் போலே தனக்கும் போக்யதைதான் வடிக்கட்டின வடிவென்று அத்யவஸித்து அதற்கேற்ப வர்த்திக்கவேணும். "செய்த் தலையெழுநாற்றுப்போல் அவன் செய்வன செய்துகொள்ள" என்று பெரியாழ்வா ரருளிச் செய்தபடியே வர்த்திக்கையாம். ஜீவாத்மா அசேதனம்போலன்றிக்கே ஜ்ஞாதாவாகத் தேறுகையாலே அதடியாக கர்த்தாவாகவும் தேறுவன். கர்த்தா வானபோதே போக்தாவாகவும் தேறுவன். ஆனால் இது வடிக்கட்டவேண்டிய நிலை யே யல்லது வடிக்கட்டின நிலையன்று. ந்யாஸதசகத்திலே "ஸ்வாமீ ஸ்வசேஷம் ஸ்வவசம்." என்கிற சுலோகத்திலே ஸ்வ சப்தத்தை ஒன்பதின்கால் இட்டருளி வடிக்கட்டிவைத்த சாஸ்த்ரார்த்தமுணர்க. ப்ரக்ருத ச்லோகத்தில், ஜ்ஞாதாவும் கர்த்தாவுமான ஜீவனிடத்திலே போக்த்ருத்வத்தை எம்பெருமான் தானே விரும்பி வைத்திருந்தாலும் ஸ்வரூபஜ்ஞனான ஜீவன் அசித்வத் பாரதந்த்ர்யமே தனக்கு வேஷ மென்றுணர்ந்து 'போக்த்ருத்வம் எம்பெருமானுக்கே யல்லது நமக்கன்று; நமக்கு போக்யதையே வடிவம்' என்றிருக்கக் கடவன் என்பதை (இந்த சுலோகத்தில்) ஒரு விலக்ஷண த்ருஷ்டாந்த முகத்தாலே சிக்ஷித்தருளுகிறார்—பாஞ்சாலிகா சுகவிபூஷண போக தாயி இத்யாதியால். பாஞ்சாலிகா—பதுமை. சுகம்—கிளி. கிளிவடிவமாக ஒரு பது மையைப் பண்ணி அதற்குச் சில போகங்களைக் கொடுத்து அது புஜிப்பதுபோல வூட்டி உகந்திருக்கும் மஹாப்ரபு போலே யென்கிறார். "பாஞ்சாலிகாம்சுக" என்கிற பாடத்தில் மரப்பாச்சிக்குச் சேலையையுடுத்திக் கண்டு களிப்பதைச் சொன்னபடி.

69. அதிலேயே-12.)* த்வாம் மாதரம் ச பிதரம் ஸஹஜம் நிவாஸம் ஸந்தஸ் ஸமேத்ய சரணம் ஸுஹ்ருதம் கதிம் ச, நிஸ்ஸீமநித்ய நிரவத்ய ஸுகப்ரகாசம் தீபப்ரகாச! ஸவிபூதிகுணம் விசந்தி.* "மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" என்னுமுப நிஷத் வாக்யமே இந்த சுலோகமாக வடிவெடுத்துள்ளது. நாராயண சப்தார்த் தத்தையனுஸந்திக்குமாசாரியர்கள் ஸ்ரீமந்நாராயணனையே எல்லாவுறவு முறையு மாக அநுஸந்திப்பர்கள். அதற்கு மூலம் மேலே காட்டிய ச்ருதி வாக்யமேயாகும். பரப்ரஹ்மத்தை நிர்க்குணமாகவும் நிர்விபூதிகமாகவும் கொள்ளுமவர்களைப் போலன்றிக்கே ஸமஸ்தகல்யாண குணாத்மகமாகவும் விபூதிவிஸ்தாரஸநாதமாகவும் கொள்ளுகின்ற ஸ்ரீவைஷ்ணவபரமைகாந்திகள் தேவரீரையே ஸகலவித பந்துவு மாகப் பற்றி தேவரீருடைய திருக்கல்யாணகுண விசேஷங்களையும் விபூதிகளையும் அநுபவித்து ஆநந்திக்கிறார்களென்றுரைாயிற்று. விசந்தி — நிர்விசந்தி என்றபடி.

70. (அதிலேயே-13.) *ஜந்தோரமுஷ்ய ஜநநே விதிசம்புத்ருஷ்டௌ ராகாதிநேவ ரஜஸா தமஸா ச யோக:, த்வைபாயநப்ரப்ருதயஸ் த்வதவேக்ஷிதாநாம் ஸத்வம் விமுக்திநியதம் பவதீத்யுசந்தி.* "ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந்மதுஸூதந:, ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த சிந்தக:" என்கிற ப்ரமாணம் ஜாயமாந காலத்திலே ஸ்ரீமந் நாராயணன் கடாக்ஷிக்க நேர்ந்தால் ஸத்வகுணோந்மேஷ முண்டாகிறதென்று தெரி விக்கின்றது. "பச்யத்யேநம் ஜாயமாநம் ப்ரஹ்மா ருத்ரோத வா புந:, ரஜஸா தமஸா சாஸ்ய மாநஸம் ஸமபிப்லுதம்." என்கிற ப்ரமாணம்—பிரமனோ ருத்ரனோ அப்போது பார்க்க நேர்ந்தால் ரஜஸ்தமோகுணங்களினால் அபிபவிக்கப் படுகையாகு மென்று தெரிவிக்கின்றது. ஆக இவ்விரண்டு ப்ரமாணங்களும் இந்த சுலோகமாக வடிவெடுத்திருக்கிறபடி. பகவச்சரணாகதியில் ஆபிமுக்ய்யம் ஜாயமாந கடாக்ஷ